விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 28 வியாழக்கிழமை (11.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 143

# பௌத்தமே முதன்மை; எந்த மாற்றமும் இல்லை

புதிய அரசியல் அமைப்பில்

## ஜனாதிபதி திட்டவட்டம்



(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தில் பௌத்த மதத்திற்கு வழங்கப் பட்டுள்ள இடத்தை அப்படியே பாதுகாத்து ஏனைய மதங்க ளுக்கு நியாயத்தை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் வேலைத் திட்டம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....


## மோடி இன்று கொழும்பு வருகை

(புதுடில்லி)

இந்திய பிரதமர் நரேந் திர மோடி 2 நாள் பயண மாக இன்று மாலை இலங்கை க்கு வருகை தர உள்ளார். மோடி பயணத்தையொட்டி இலங்கையில் பாதுகாப்பு ஏற் பாடுகள் பலப்படுத்தப்பட்டுள் ளன. சுமார் 6 ஆயிரம் பொலி ஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று மாலை கொழும்பு

24ஆம் பக்கம் பார்க்க...


யாழ்ப்பாணத்தில் நேற்றைய வெசாக் காட்சி...

## புலம்பெயர் அமைப்புகள் குழப்பத்திற்கு முயற்சி!

### ராஜபக்ஷ விசனம்



(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட் தரப்பி னர் முன்வைக்கும் காரணிகள் நியாயமா னவையே. எனினும் ஒரு தரப்பினர் சர்வதேச விசாரணை பொறிமுறை அவசியமென கருத்துக்களை முன்வைத்த போதிலும்

23ஆம் பக்கம் பார்க்க...

## 24 வருட சிறைவாசம்
## தமிழ் அரசியல் கைதி மகேந்திரன் ஜனாதிபதிக்கு உருக்கமான கடிதம்

(கொழும்பு)

சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றின்போது 19 வயதில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த 24 வரு டங்களாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் தமிழ் அர சியல் கைதி ஒருவர், தனது சிறைத் தண்டனையைக் குறைத்து சாதாரண பிரஜை யாக வாழ வழிசெய்யுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு உருக்க மான கடிதம் ஒன்றை அனு ப்பியுள்ளார்.

மட்டக்களப்பு முறக்கொட் டாஞ்சேனையைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மகேந்திரன என்ற தமிழ் அரசியல் கைதியே இந்த வேண்டுகோளை விடு

24ஆம் பக்கம் பார்க்க...

## 4 தங்க சங்கிலிகள் சீரணியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்மன் ஆலயத்தின தேர் திருவிழாவான நேற் றையதினம் 4 தங்கச் சங்கிலி கள் திருட்டுப் போயுள்ளன.

இவ்வாறு திருட்டுப் போன நான்கு தங்கச் சங்கிலிகளும 8 பவுண் நிறையுடையவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க...

## முதலமைச்சரிடம் மன்னிப்பு கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமை ச்சரின் மனம் உளைச்சலுக் குள்ளாகும்படி செயற்பட்டிரு ந்தால் அவரிடம் மன்னிப்புக கோருவதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண சபையின் முன்பாக நேற்று வேலைய ற்ற பட்டதாரிகள், வட மாகாண

24ஆம் பக்கம் பார்க்க...

## மோடியின் விஜயத்தில் ஒன்றும் கிடையாது!

(புதுடில்லி)

பிரதமர் நரேந்திர மோடி யின் இலங்கை விஜயத்தின் போது எந்தவொரு உடன் படிக்கையும் கைச்சாத்திடப் பட மாட்டாது என இந்திய மத திய அரசின் இணைச் செய லாளர் சஞ்சய் பாண்டா தெரி

24ஆம் பக்கம் பார்க்க...

## வித்தியா படுகொலை வழக்கு கொழும்புக்கு மாற்ற முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடு தீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா வின் வழக்கு விசாரணை களின் கோவைகள் மற்றும் குற்றப் பத்திரம் போன்றவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன் றுக்கு சட்டமா அதிபரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் குறித்த வழக்கை கொழும்புக்கு மாற்றுவதற் கான ஏற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டு வருவதாக உறு தியான தகவல்கள் தெரிவி த்துள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு

23ஆம் பக்கம் பார்க்க...

## மோடியுடன் நானும் -மகிந்த

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங் கையில் பங்கேற்கும் நிகழ்வில் தாமும் பங் கேற்க உள்ளதாக நாடா ளுமன்ற உறுப்பினர மகிந்த ராஜபக்ஷ தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## ஒத்துழைப்பை கோருகின்றார் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

குற்றத்தடுப்பு நடவடிக்கைகளு க்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர கோரியுள்ளார்.

தமது சுற்றுச்சூழலில் நிகழும் குற்றங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறி விக்குமாறும் அல்லது பொலிஸ் மா

24ஆம் பக்கம் பார்க்க....

## விமான நிலையத்திலேயே மோடி-கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையி லான சந்திப்பு நாளை வெள் ளிக்கிழமை கட்டுநாயக்க சர் வதேச விமான நிலையத்தி லேயே நடைபெறவுள்ளது.

இரண்டு நாள் உத்தியோகப் பூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் மோடி இன்று இலங் கைக்கு வருகை தரவுள்ளார்.

தொடர்ந்து பல்வேறு நிக ழ்வுகளில் கலந்து கொள்ளவு ள்ள மோடி நாளை வெள்ளி

24ஆம் பக்கம் பார்க்க...

## முல்லையில் மீண்டும் அடாத்து 150 வீடுகளுக்கு அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முள்ளிய வளையில் முஸ்லிம் அமைச சர் ஒருவருடைய ஏற்பாட்டில் வன இலாகாவுக்கு சொந்த மான காட்டுப்பகுதியில் 150 வீடுகளுக்கான அடிக்கல் சட்ட விரோதமான முறையில் நாட்டி வைக்கப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட விரோதமான நடவடிக்கைக்கு அரச அதிகா ரிகள் சிலரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. முல்லைத்தீவு

23ஆம் பக்கம் பார்க்க...

## இன்னொரு போரை எதிர்கொள்ள நேரிடும்
## சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்களை நல்லி ணக்கத்தின் மூலமே தடுக்க முடியும். இதனை இப்போது நாம் செய்யாவிட்டால், எதிர் காலத்தில் இன்னொரு போரை

23ஆம் பக்கம் பார்க்க...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளால் வீழ்த்தப்பட்ட விமானப் பாகங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட இலங்கை விமானப் படையின் வை-8 ரக விமானத்தின் பாகங்கள் ஆனையிறவு இயக்கச்சி பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்ட விமான. பாகங்களானது கடந்த 1992ஆம் ஆண்டு சுட்டு வீழ்த்தப்பட்ட பலாலி விமானப் படையினருக்குச் சொந்தமான விமானத்தின் பாகங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் விமானப்படையினரின் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விமானத்தின் பாகங்களையும் மீட்டுள்ளனர்.

சுமார் 25 வருடங்களின் பின்னர் குறித்த விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறை சட்டத் திருத்தம் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் நீதித்துறை சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

வழக்குகளை தீர்த்துக்கொள்வதில் ஏற்படுகின்ற தாமதங்களினால் பொதுமக்கள் நீதிமன்றங்களின் மீதும் அரசாங்கத்தின் மீதும் வைத்துள்ள நம்பிக்கை குறைந்து வருகின்ற நிலையில், பொதுமக்களின் நன்மை கருதி இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி தற்போது 75ஆக உள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 85ஆக உயர்த்தும் வகையில் 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதித்துறை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

# வடக்கில் வெசாக் கூடுகளை பாதுகாக்க இராணுவத்தினர் குவிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பல பகுதிகளிலும் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள வெசாக் அலங்காரங்களை பாதுகாப்பதற்கும் கண்காணிப்பதற்கும் இம்முறை பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் தினம் இலங்கையில் கொண்டாடப்படவுள்ள நிலையில், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் வெசாக் பண்டிகை களைகட்டத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக கண்டி, அநுராதபுரம், பொலநறுவை, காலி உள்ளிட்ட நகரங்களில் பாரிய அளவிலான வெசாக் தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வடக்கிலும் பாரிய அளவிலான வெசாக் அலங்காரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வெசாக் கூடுகள் தயாரிப்பதிலும், வெசாக் தோரணங்கள் அமைப்பதிலும் படையினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

அதேபோன்று யாழ். பொதுநூலக சுற்று வளாகத்தில் பிரமாண்டமான வெசாக் தோரணங்கள் படையினரால் அமைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் பொது மக்கள் பார்வையிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலங்காரங்களை கண்காணிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பெருமளவிலான இராணுவத்தினர் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (9)

# தான சாலைகள் பரிசோதனையில்

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நாடு தழுவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அன்னதானசாலைகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 5217 அன்னதான சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

# பேஸ்புக் பயன்படுத்தும் பெண்களுக்கு எச்சரிக்கை!

(கொழும்பு)

பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக் ஊடாக பல பெண்களின் அந்தரங்க விடயங்கள் வெளியிடப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் அனைவரினாலும் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக பேஸ்புக் மாறியுள்ளது.

இந்நிலையில் இதனை இலக்கு வைத்து பல்வேறு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இலங்கையில் "பெண்கள் விற்பனைக்கு உண்டு" என பேஸ்புக் பக்கம் ஒன்று செயற்படுத்தப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த பக்கத்தில் அனுமதியின்றி பெண்களின் புகைப்படங்கள் பகிரப்பட்டு பலர் ஏமாற்றப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பேஸ்புக் மற்றும் தனிப்பட்ட ரீதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட பெண்களின் அந்தரங்க புகைப்படங்கள் இந்தப் பக்கத்தில் பகிரப்படுகிறது.

அத்துடன் அவர்களை பாலியல் நடவடிக்கையில் ஈடுபடும் பெண்களாக அடையாளப்படுத்தப்படுவதுடன், அவர்களின் தொலைபேசி இலக்கங்களும் பகிரப்படுகின்றன.

பல்வேறு நபர்கள் இந்த தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதால் குறித்த பெண்கள் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பேஸ்புக் பக்கம் தொடர்பில் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# வவுனியாவில் திருட்டு சந்தேக நபர் கைது

(வவுனியா)

புதுக்குடியிருப்பு உள்ளூர் உற்பத்தி தொழிற்சாலை யொன்றில் கடந்த முதலாம் திகதி இடம் பெற்ற திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை ஊடகவியலாளர்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வந்த நபரொருவர் தொழிற்சாலையில் எவரும் இல்லாத நிலையில் அங்கிருந்த அலுவலகத்தில் பணம் வைக்கப்பட்டிருந்த பெட்டியை உடைத்து திருடியுள்ளார்.

இந்த நிலையில் தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவு செய்யப்பட்டிருந்த குறி த்த நபர் பணம் திருடும வீடியோ காட்சி சில இணையத் தளங்களில் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து குறித்த சந்தேக நபர் வவுனியா நகரப் பகுதியில் நடமாடுவதை அவதா னித்த ஊடகவியலாளர்கள் சிலர் குறித்த தொழிற்சாலை யின் உரிமையாளரு டன் தொடர்பு கொண்டு சந்தேக நபர் தொடர்பான மேலதிக விபர ங்களை கோரியிருந்த னர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் குறித்த நபரே என அறிந்துகொண்ட பின்னர். வவுனியா பொலிஸாருக்கு ஊடகவியலாளர்கள் தகவல் வழங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகைத்தந்த பொலிஸார் ஊடகவியலாளர்களின் உதவியுடன் சந்தேக நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந் நிலையில் வவுனியா முதலாம் குறுக்குத்தெருவில் விடுதியொன்றில் மறைந்திருந்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.


1ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 12 - 06 - 1949

மறைவு 23 - 04 - 2016

கூவில் புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

கிட்டிணன் சந்திரசேகரம் (சந்திரன்)

ஆண்டொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...

கூவில்,
புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:- 021 226 0225

(C-8536)



அராலி மத்தி ஊரத்தி மகமாரி அம்மன் ஆலய

அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

ஆலய கட்டிட நிதிக்காக ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பு 10.05.2017 அன்று ஆலய முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதன் வெற்றி இலக்கங்கள்

1. 1654 2. 5260 3. 1911

குறிப்பு:- இவ் அதிர்ஷ்டசாலிகள் 20.05.2017ஆம் திகதிக்கு முன்பு இலக்கங்களுக்குரிய பற்றுச்சீட்டை ஆலய பரிபாலன சபையினரிடம் சமர்ப்பித்து உரிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(8984) தொடர்பு: 077 600 2364



குடிநீர் விநியோகம்

பிரபுல நிறுவனத்தின் சுத்திகரிக்கப்பட்ட 20L குடிநீர் போத்தல்கள் தேவைக்கேற்ப உங்கள் இருப்பிடங்களுக்கு கொண்டு வந்து தரப்படும்.

*பாவித்த நல்ல நிலையில் உள்ள 20L வெற்றுப் போத்தல்கள் தேவை.

தொடர்புகளுக்கு:- (8983)

077 354 9092



வீடு உடனடி வாடகைக்கு

பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் ராஜா பிளாசா ஒழுங்கையில் (திருச்செல்வம் வீதி) புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட விசாலமான வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

(8974)

தொடர்புகளுக்கு
077 670 5196
077 216 3697





வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் வல்லையின் இந்திரவிழா நேற்றைய தினம் வல்வை மக்களால் கொண்டாடப்பட்டது.

# இலங்கை மக்களிடையே நீண்டகால அமைதி நிலைக்க வேண்டும்



## வெசாக்கை முன்னிட்டு ஐ.நா.விசேட அறிக்கை

(கொழும்பு)

இலங்கை மக்கள் மத்தியில் சமாதானம் நிலையான அபிவிருத்தி மற்றும் நீண்டகால அமைதி என்பன ஏற்படுத்தப்பட வேண்டும் என பிரார்த்திப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "இலங்கையின் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பு மிக்கவை. மனித உரிமைகள், நல்லாட்சி, மரியாதை அளித்தல் போன்ற பல்வேறு நல்ல விடயங்களை பௌத்தம் போதிக்கின்றது.

பௌத்த மதத்தின் போதனைகளை மனதில் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும். அதன்மூலம் மக்கள் மத்தியில் சமாதானம், நிலையான அபிவிருத்தி மற்றும் நீண்டகால அமைதியை ஏற்படுத்தலாம்.

இம்முறை வெசாக் தின நிகழ்வுகள் 'சமூக நீதி மற்றும் நீடித்து நிலைக்கும் சமாதானம்' என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது' என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வெசாக் தினத்தை முன்னிட்டு 575 கைதிகள் விடுதலை

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 575 கைதிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் சிறு குற்றங்கள் இழைத்தவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

அபராதத்தை செலுத்த தவறிய கைதிகளும் 75 வயதுக்கு மேற்பட்ட 10 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்த கைதிகளுமே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச்சூடு தொடர்பில் சாகல அறிக்கை கோரல்

(கொழும்பு)

பிலியந்தலையில் அரச வங்கி ஒன்றிற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைப்புக்காக சென்ற பொலிஸ் போதை தடுப்பு பிரிவு அதிகாரிகள் குழு மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில், சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவிடம் விசாரணை அறிக்கை கோரியுள்ளார். (இ-7)

# இனப்பிரச்சினை விடயத்தில் முஸ்லிம்கள் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா அறிவுரை



இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்கள் தெளிவாக ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் எனத் தெரிவித்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இனப்பிரச்சினை தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியமைக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா நேற்று விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வட மாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் வடக்கும் கிழக்கும் இணைவது இயற்கையானது என்றும் முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு வழங்குவதற்கு எதிராக தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த கருத்தை வன்மையாகக் கண்டித்து நான் அண்மையில் காத்தான்குடியில் பேசியிருந்தேன். இதன் போது, வடகிழக்கு இனப்பிரச்சினை தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும் என நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கமைய மிக விரைவிலேயே அது தமது நிலைப்பாட்டை தெளிவுடுத்தியிருந்தது.

வடகிழக்கு இனப்பிரச்சினை தொடர்பில் அது வெளியிட்டிருந்த அறிக்கையில், வடக்கும் கிழக்கும் பிரிந்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அதிகாரப் பகிர்வு சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நீதியாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இவ்வாறு வெளியிட்ட அறிக்கையை அதன் செயலாளர் சகோதரர் நஜா முஹம்மத் எனக்கும் அனுப்பி வைத்திருந்தார். ந.தே.முவின் தெளிவுபடுத்தலுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடகிழக்கு பிரச்சினை தொடர்பில் முஸ்லிம்கள் அனைவரும் தெளிவாக ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். எங்களுக்கு மத்தியில் வித்தியாசமான கொள்கைகள், கருத்துகள், போக்குகள் இருக்குமாயின் அது எமது சமூகத்துக்கு எதிர்காலத்தில் பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

அந்தவகையில், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியும் வடக்கும் கிழக்கும் பிரிந்து தான் இருக்க வேண்டும் என தமது நிலைப்பாட்டை தெளிபடுத்தியது வரவேற்கத்தக்கதாகும் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஷசாங் மனோகர் சேர்மனாக தொடர பச்சைக் கொடி காட்டியது ஐ.சி.சி




ஷசாங் மனோகர் தனது பதவி காலம் முடியும் வரை சேர்மன் பதவியில் தொடரலாம் என்று ஐ.சி.சி உறுதி செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த் ஷசாங் மனோகர் கடந்த ஆண்டு (2016) மே மாதம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) முதலாவது தனிப்பட்ட சேர்மனாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். பதவி காலம் மேலும் 16 மாதங்கள் இருந்த நிலையில் ஷசாங் மனோகர் ஐ.சி.சி. தலைவர் பதவியில் இருந்து கடந்த மார்ச் 15ஆம் திகதி திடீரென ராஜினாமா செய்தார். தனிப்பட்ட காரணத்துக்காக அவர் பதவியில் இருந்து விலகியதாக விளக்கம் அளிக்கப்பட்டது.


இதற்கிடையில் ஐ.சி.சி. செயற்குழு சார்பில் ஷசாங் மனோகர் தனது ராஜினாமாவை திரும்ப பெற வேண்டும் அல்லது குறைந்தபட்சம் ஐ.சி.சி.யின் நிர்வாக மற்றும் நிதி மறுசீரமைப்பு விவகாரத்தில் இறுதி முடிவு எட்டப்படும் வரை பதவியில் நீடிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஐ.சி.சி. செயற்குழுவின் இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஷசாங் மனோகர் தனது ராஜினாமா முடிவை தற்காலிகமாக ஒத்தி வைத்து இருப்பதுடன், விதிமுறை திருத்த பிரச்சினை முடிவுக்கு வரும் வரை பதவியில் நீடிக்க சம்மதம் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில், ஷசாங் மனோகர் தனது பதவி காலம் முடியும் வரை சேர்மன் பதவியில் தொடரலாம் என்று ஐ.சி.சி உறுதி செய்துள்ளது.

அதிகாரப்பூர்வமாக வருகின்ற 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் தான் மனோகரின் பதவிக் காலம் முடிவடைய உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அசலை மிஞ்சிவிட்ட ஈரானின் மெஸ்சி



ஆர்ஜென்டினாவின் கால்பந்து வீரர் மெஸ்சியைப்போன்ற உருவத் துடன் ஈரானில் ரசல் என்பவர் வலம் வருகிறார். இவருடன் புகைப்படம் எடுக்க ரசிகர்கள் குவிந்ததால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆர்ஜென்டினா கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்சி (29) பார்சிலோனா கிளப் அணியிலும் விளையாடி வருகிறார். இவரின் மந்திர ஆட்டத்திற்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர்.

ஈரானில் இவரைப்போன்ற தோற்றம் கொண்ட ரசா பராஷ் டெசுக்கும் மவுசு அதிகரித்துள்ளது. தாடி, 'ஹேர் ஸ்டைல்', பார்வை என அனைத்திலும் இவர் மெஸ்சியைபோலவே காட்சி அளிக்கிறார். கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் இவருடன் 'செல்பி' எடுக்க கூட்டம் கூடிவிடுகிறது.

சமீபத்தில், ஈரானில் உள்ள ஹமாதின் நகருக்கு இவர் காரில் சென்றிருந்தார். இவருடன் புகைப்படம் எடுக்க ரசிகர்கள் அதிகளவில் கூடி விட்டனர். இதனால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக, ஒருவழியாக பொலிஸார் வந்து காரை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றனர். இந்த நிலை தொடர்ந்தால் சிறை தண்டனை விதிக்கப்படும் என ரசாவை எச்சரித்தனர்.

இது குறித்து ரசா கூறுகையில்," என்னை மெஸ்சி என்றே ரசிகர்கள் நினைக்கின்றனர். 'செல்பி' எடுக்க அழைப்பதை மகிழ்ச்சியாக ஏற்கிறேன். கால்பந்து வரலாற்றில் சிறந்த வீரராக மெஸ்சியைத்தான் எண்ணுகிறேன். இவரின் நகலாக வருகிறேன்," என்றார்.

## சிறிலங்கா கிறிக்கெற் பிரிவு III - 2017

# சிறி காமாட்சியை வீழ்த்திய யாழ். பல்கலைக்கழக அணி



சிறிலங்கா கிறிக்கெற் பிரிவு III - 2017 தொடரிலிருந்து இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள் வரிசையில் 15 ஆவது போட்டி கடந்த 01.05.2017 அன்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற 15ஆவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி, சிறிகாமாட்சி அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று தனது 4ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி அணி 28.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களை பெற்றனர். பிரதாப் 15, கஜீவராஜ் 42 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் குருகுலசூரிய 5, லோகதிஸ் 2, நிதர்ஸன், செந்தூரன், கஜேந்திரா ஆகியோர் தலா 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 14.4 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றனர். யோகேஸ்வரன் 11, கபில்ராஜ் 20, துவாரகசீலன் ஆட்டமிழக்காது 27, தரங்கா ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் துவாரகன் 2, தீபநாதன் 1 இலக்குகளையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ். பல்கலைக்கழகம் 7.68 புள்ளிகளையும், சிறி காமாட்சி அணி 1.27 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

# மாட்ரிட் ஓபனில் ஷரபோவாவை வீழ்த்தினார் யூஜெனி பவுச்சர்ட்



மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் 2-வது சுற்றில் மரியா ஷரபோவாவை கடும் போராட்டத்திற்குப் பின் 7-5 2-6 6-4 என வீழ்த்தினார் கனடாவின் யூஜெனி பவுச்சர்ட்.

ஸ்பெயின் நாட்டில் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் மரியா ஷரபோவா, கனடாவின் யூஜெனி பவுச்சர்ட் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினார்கள். மரியா ஷரபோவாவிற்கு 'வைல்டு கார்டு' கொடுக்கக்கூடாது என்று கடுமையான எதிர்ப்பு தெரிவித்தவர் 'யூஜெனி பவுச்சர்ட்'.

தன்னை களம் இறங்க எதிர்ப்பு தெரிவித்தவருக்கு சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்று மரியா ஷரபோவா நினைத்தார். அதே வேளையில் கடும் எதிர்ப்பு தெரிவித்துவிட்டு தோற்றால் அவமானமாகிவிடும் என்ற எண்ணத்தோடு யூஜெனி பவுச்சர்ட் களம் இறங்கினார்.

இதனால் ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் செட்டில் இருவரும் பயங்கரமாக மோதிக்கொள்ள இறுதியில் யூஜெனி பவுச்சர்ட் 7-5 என வெற்றி பெற்றார்.

பின்னர் வீறுகொண்ட எழுந்த மரியா ஷரபோவா 2-வது செட்டில் யூஜெனி பவுச்சர்ட்டை 6-2 என வீழ்த்தினார். ஆனால் வெற்றியை தீர்மானிக்கும் 3-வது செட்டில் கோட்டை விட்டார். இதனால் யூஜெனி பவுச்சர்ட் 7-5, 2-6, 6-4 என மரியா ஷரபோவாவை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

# பெண்கள் கிரிக்கெட்டில் 181 விக்கெட்டுக்கள் ஜூலன் கோஸ்வாமி வீழ்த்தி உலக சாதனை



பெண்கள் கிரிக்கெட் வரலாற்றில் ஒருநாள் போட்டியில் 181 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, அதிக விக்கெட் வீழ்த்திய வீராங்கனை என்ற பெருமையை இந்திய வீராங்கனை ஜுலன் கோஸ்வானி பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நான்கு மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற தென்ஆப்பிரிக்காவிற்கு எதிரான போட்டியில் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜுலன் கோஸ்வாமி 7.3 ஓவரில் 20 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இதன்மூலம் ஒருநாள் போட்டியில் 181 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீராங்கனை என்ற சாதனையைப் பெற்றுள்ளார். இதற்கு முன் அவுஸ்திரேலிய வீராங்கனை கேத்ரின் 180 விக்கெட்டுக்கள் வீழ்த்தியது தான் சாதனையாக இருந்தது.

2002ஆம் ஆண்டு ஒருநாள் போட்டியில் அறிமுகமான கோஸ்வாமி இதுவரை 153 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனையான முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் நீது டேவிட் 141 விக்கெட்டுக்கள் வீழ்த்தி 4-வது இடத்தில் உள்ளார்.

# இந்திய பெண்கள் ஹொக்கி அணி நியூசிலாந்து பயணமாகின்றது




ராணி தலைமையிலான இந்திய பெண்கள் ஹொக்கி அணி, நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 5 ஆட்டங்கள் கொண்ட போட்டி தொடரில் விளையாடுகிறது. இந்தியா-நியூசிலாந்து பெண்கள் அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டம் வருகிற 14ஆம் திகதி நடக்கிறது.

இந்த போட்டி தொடருக்கான இந்திய பெண்கள் ஹொக்கி அணி நேற்று முன்தினம் டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்றது.

இந்த போட்டி குறித்து இந்திய அணியின் தலைவர் ராணி கருத்து தெரிவிக்கையில், 'இன்னும் 3 மாதங்களில் நடக்க இருக்கும் உலக லீக் அரைஇறுதி போட்டிக்கு தயாராக இந்த போட்டி தொடர் பயனுள்ளதாக இருக்கும். உயர்ந்த தரவரிசையில் உள்ள நியூசிலாந்து அணியுடன் ஆடுவது நமது ஆட்ட தரத்தை மேலும் உயர்த்துவதுடன், நமது பலவீனத்தை புரிந்து கொள்ளவும் உதவும்' என்றார்.

# தெரேசா இல்ல முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் ஏற்பாட்டில் துஷா கண்ணாடியகத்தின் நிதி அனுசரனையுடன் கைதடி லயன்ஸ் கழகத்தால் இருபாலை அன்னை தெரேசா முதியோர் இல்ல முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இருபாலை அன்னை தெரேசா முதியோர் இல்லத்தில் இடம்பெறும்.

பிரதேச தேசோதயத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் துஷா பல்மூக்குக் கண்ணாடியகத்தின் உரிமையாளர் லயன். து.மகேந்திரன், சர்வோதய யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா, யாழ். மாவட்ட தேசோதய தலைவர் நா.தனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



(8978)

### திரு. கந்தையா இரத்தினபூபாலன்

கடந்த 12.04.2017 இறைபதமடைந்த எமது பாடசாலையின் முன்னாள் இணை அதிபர் திரு. கந்தையா இரத்தினபூபாலன் (SLPSI) அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயம்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி. ஸ்ரீ நகுலமீரா சிதம்பரநாதன்

திதி : அபரபக்க பிரதமை

பிறப்பு : 16.05.1947 இறப்பு : 21.04.2008



(8972)

விதியின் வழியே பயணம் எனினும்
ஏங்குகிறது மனம் உங்களுக்காக
ஒன்பது ஆண்டுகள் கடந்தே
தொடர்கிறோம் பயணம் அதனை
உங்கள் நினைவுடனேயே...

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

இங்ஙனம் :
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இராசி பலன்

11.05.2017
(சித்திரை 28, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பிரதமை பின்னிரவு 5.08 மணிவரை
விசாகம் பிற்பகல் 5.13 மணிவரை
சுபநேரம் 7.24 -8.54 மணிவரை
இராகுகாலம் 1ள.24 - 2.54 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி-அச்சுவினி காலை 10.55 மணிக்கு விருச்-சந் | | |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்றுசெய்து முடிப்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**மேடம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும். முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், வீட்டை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், நீண்டநாளைய ஆசை ஒன்று நிறைவேறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்** சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்,எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம் பெறலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குண மறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்,வழிபாடு ஏகுதூகலம் தரும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போஜன சுகமுண்டு.

# இயல் இசை நாடக இரண்டாம் நாள் நிகழ்வு

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4. 30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கத்தில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் திருமறைக்கலாமன்ற நிர்வாக இயக்குநரும் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபருமான அருட்திரு ஜெரோ செல்வநாயகம் ஆசியுரையினையும் மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் எம்.கண்ணன் வாழ்த்துரையினையும் வழங்குவார்.

இந்நிகழ்வில் சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் கோலாட்டம், அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜா வழங்கும் முத்தமிழ் இனிமை, கவிதை மழை, இசைவிருந்து, தொன்மம் கலை குழுவினர் வழங்கும் பறை, இசை நடனம்.

மேலும் நிருத்திய கீதாலயம் மாணவிகள் வழங்கும் நிருத்தியாஞ்சலி. இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி வழங்கும் மாமிக்கு வாச்ச மருமகள் (நகைச்சுவை நாடகம்). வசந்தம் வில்லிசைக் குழுவினர் வழங்கும் நாவலர் இன்று இருந்திருந்தால் என்னும் வில்லிசை என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

# தேசிய பாதுகாப்பிற்கும் மக்களின் காணிகளுக்கும் என்ன சம்பந்தம்?

## டக்ளஸ் தேவானந்தா கேள்வி

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நிலவிய காலப் பகுதிகளில் பாதுகாப்பு காரணங்களுக்கென கையகப்படுத்தப்பட்ட எமது மக்களின் காணி, நிலங்களில் இன்னும் விடுவிக்கப்படாதிருக்கும் காணி, நிலங்களுக்கும், தேசிய பாதுகாப்புக்கும் இடையில் எவ்விதமான தொடர்புகளும் இல்லை என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புடன் எமது மக்களது காணி, நிலங்களைத் தொடர்புபடுத்தி இவ்வாறான கருத்துக்களைக் கூறி, எமது மக்களது சொந்த காணி, நிலங்களை தொடர்ந்து முடக்கி வைத்திருப்பதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, யுத்தம் நிலவிய காலப்பகுதியில் எமது மக்களது காணி, நிலங்கள் பாதுகாப்புப் படைகளினால் கையகப்படுத்தப்பட்டிருந்தாலும், தற்போது யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, பல வருடங்கள் கழிந்துள்ள நிலையில், மீண்டும் இந்த நாட்டில் யுத்தமொன்று ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக நான் நம்பவில்லை. சுயலாப அரசியல் மற்றும் இனவாதம் கருதி ஒரு சிலர் இந்த நாட்டில் மீண்டும் யுத்தமொன்று வருமென கூறி வருகின்றனர் என்பதற்காக எமது மக்களின் காணி, நிலங்களை அதற்கு காவு கொடுக்க முடியாது.

எமது மக்கள் வாழ்வதற்காகவும் தங்களது வாழ்வாதாரங்களை முன்னெடுப்பதற்காகவுமே தமது காணி, நிலங்களைக்கோரி போராடி வருகின்றனர். இந்த காணி, நிலங்கள் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. எமது மக்களது வாழ்க்கையுடன் உணர்வு ரீதியாகப் இணைந்தவை. எனவே, இவற்றை எமது மக்களுக்கென விடுவித்து, பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்ற எம் மக்களை நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டியது இந்த அரசின் பொறுப்பாகும்.

அதேநேரம், தேசிய பாதுகாப்பு கருதி படைகள் நிலைகொள்ள வேண்டுமாயின், அதற்கேற்ப, அவ்வப் பகுதிகளின் மக்கள் தொகைக்கும், இன விகிதாசாரத்திற்கும் ஏற்ற வகையில் படைகள் நிலைகொள்வதற்கு பொருளாதார வளங்கள் குன்றிய, அரச தரிசு நிலங்கள் பெருந்தொகையில் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கின்றபோது, எமது மக்களின் சொந்த காணி, நிலங்களுக்கும் தேசிய பாதுகாப்பிற்கும்முடிச்சுப் போட்டுக் கொண்டு, காலத்தை இழுத்தடிக்கக் கூடாது.

எமது மக்களது பிரச்சினைகள் எந்தளவுக்கு சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றவோ, அந்தளவுக்கு விரைவாக இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கம் உட்பட அனைத்து விடயங்களையும் முன்னெடுக்க முடியுமென டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# குழந்தைக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் நல்லிணக்க புர வீட்டுத்தொகுதியில் வாழ்ந்துவரும் பொருளாதார நலிவான குடும்பத்தை சேர்ந்த 3 வயதான குழந்தையொன்று பிறப்பிலிருந்தே மலவாசலின்றி, அவல நிலையில் வாழ்ந்து வருகிறது. இதனை குணப்படுத்த சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும், சத்துணவுகள், பராமரிப்பு செலவுகளுக்கு அதிகளவு நிதி தேவைப்படுவதால் குறித்த குழந்தையின் குடும்பத்தினால் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தை தொடர்பு கொண்டு உதவி வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் “உயர்த்தும் கரங்கள்” விசேட செயற்குழு சத்துணவு மற்றும் பராமரிப்பு செலவு, மருத்துவ செலவுகளுக்காக ஒரு தொகை பணம் வழங்கியது. (இ-3)

# நூலகவியலும் ஆவணவாக்கலும் கலந்துரையாடல் நாளை

நூலக வாரத்தை முன்னிட்டு நூலகவியலும் ஆவணவாக்கலும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று நாளை 12 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் பொது நூலகத்தில்நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் எழுத்தாளர்கள், நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள், வெளியீட்டாளர்கள், நூலகவியல் கற்கும் மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். கலந்துரையாடலை தொடர்ந்து நூல் கண்காட்சியும் இடம்பெறும். (இ-9)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமைக் கட்டணமாக ரூபா 30 செலுத்தப்பட வேண்டும்.

15.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சென்றோக் சனசமூக நிலையம் முன்பாக, காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை றெக்கிளமேசன் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை புதிய கடற்கரை - தண்ணீர் தாங்கி சந்தி, 16.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை தண்ணீர்த் தாங்கி முதலாம் குறுக்குத் தெரு, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை, தண்ணீர்த் தாங்கி 3 ஆம் குறுக்குத் தெரு, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை தண்ணீர்த் தாங்கி 4ஆம், 5ஆம் குறுக்குத் தெரு, 17.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை, சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக, முற் பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை, 4 ஆம், 5ஆம் குறுக்குத் தெரு, பிற்பகல் 2.30 மணி தொடக் கம் பிற்பகல் 4 மணி வரை சிப்பித்தரை வீதி, 18. 05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை, 3 ஆம் குறுக்குத் தெரு குருநகர், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை, 2 ஆம் குறுக்குத் தெரு குருநகர், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை ஜஸ்பிளான்ட் வீதி, 19.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை, குருநகர் சனசமூக நிலையம் முன்பாக, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரைகடற்கரை வீதி 4 ஆம் குறுக்குத் தெரு சந்தி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பாங்சால் வீதி 3ஆம் குறுக்குத் தெரு சந்தி, 22.05. 2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை, யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை, புதுமை மாதா ஆலயத்திற்கு முன்பாக, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை ஓடக்கரை வீதி, 24.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை, கொட்டடி வீதி சந்தி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை அடப்பன் வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாக, 25.05.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை, குருநகர் சின்ன ஆஸ்பத்திரி வீதி முன்பாக, முற்பகல் 11 மணி தொர்டக்கம் பிற்பகல்ஒரு மணி வரை செபஸ்ரியார் கோவில் அருகாமை, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மவுண் கார்மல் வீதி, 26.05.2017 காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அனைத்துப் பகுதிகளிலும் நடமாடும் சேவைகள் இடம் பெறவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ

# மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் சேர்.வை.துரைசாமி ஞாபகார்த்த பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-3)

# ‘ஸ்ரீசுந்தர ஆஞ்சனேய பிரபாவம்’

இணுவில்-மருத னார் மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சனே யர் ஆலய சுந்தர காண்ட மங்கல யக்ஞ நிகழ்வில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் கிரியை கள் ஆரம்பமாகி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ‘‘ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேய பிர பாவம்’’ எனும் தலைப்பில் ஆன்மீக உரை இடம் பெற்று பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ-3)




# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு இவ்வருடம் இரண்டாவது தடவையாக தோற்றும் மாணவர்கள் தங்கள்விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி இம் மாதம் 19ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர் எஸ்.லோகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-3)

# பல உள்ளக வீதிகளுக்கு மின் விளக்குகளை பொருத்துவதற்கு மின்சாரசபை நடவடிக்கை

மூளாய் பகுதியில் மின் விளக்குகள் இல்லாத பல உள்ளக வீதிகளுக்கு மின் விளக்குகளை பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூளாய் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள வீதிகளில் பலவற்றில் மின் விளக்குகள் இன்மையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதையடுத்து பழுதடைந்த மின் குமிழ்களுக்கு பதிலாகப் பொருத்துவதற்கு என கிராம அபிவிருத்திச் சங்கம் தமது சொந்த நிதியில் 10 மின்குமிழ்களைக் கொள்வனவு செய்துள்ளது.

மேலும், நலன் விரும்பிகளின் மூலம் 7 புதிய மின் விள்க்குகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைப் பொருத்தித் தாருங்கள் என இலங்கை மின்சார சபையின் தொல்புரத்தில் உள்ள அலுவலகத்திற்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்த போதிலும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை பின்னடித்து வருகிறார்கள். என மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.கதிர்காமத்தம்பி தெரிவித்தார்.


தற்போது மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் மின்குமிழ்களைப் பொருத்தித் தர மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-9)



சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அரிசி பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

42

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி. பதவியில் ஒன்று திருகோணமலை மாவட்டத்திற்குக் கொடுத்தாக வேண்டும். மிகுதி ஒரு எம்.பி. பதவியில் பெண் பிரதிநிதித்துவத்தின் பொருட்டு பெண் ஒருவருக்கு

தேசியப் பட்டியல் எம்.பிக்கள்



துரைரட்ணசிங்கம்



திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா

வழங்குவது கட்டாயமானதாகும் எனக் கூறிய சுமந்திரன் தேவையாயின் ஒரு எம்.பி. பதவியில் இரண்டரை ஆண்டுகளை அருந்தவபாலனுக்கு வழங்க முடியும் என்ற செய்தியைத் தெரிவித்தார்.

அப்போது முன் அரைப் பகுதியை அருந்தவ்பாலனுக்குத் தாருங்கள் என அருந்தவபாலனின் ஆதரவாளர்கள் சுமந்திரனிடம் கோரிக்கை வைத்தனர்.

அதற்கு திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு முதல் இரண்டரை ஆண்டுகள் வழங்கப்படுமெனவும் அடுத்த இரண்டரை ஆண்டுகள் அருந்தவபுாலனுக்கு வழங்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உறுதிமொழி வழங்கினார்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்ததாயின் 2018.02.17 அன்று இரண்டரை ஆண்டுகள் நிறைவு பெறும். ஆக, முன் இரண்டரை ஆண்டுகள் முடிய தனது பதவியைத் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா இராஜினாமாச் செய்ய அருந்தவபாலன் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்க வேண்டும். இதெல்லாம் நடக்குமா? நடக்காவிட்டால் அதன் எதிர்விளைவு எப்படியாக இருக்கும் என்பதை எல்லாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அருந்தவபாலனின் வீட்டில் நடந்த சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் கலந்து கொண்டிருந்தார்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி

என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி. பதவியில் ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட துரைரட்ணசிங்கத்திற்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கும் வழங்கப்பட்டது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தாலும் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் எம். பி. பதவியையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனதாக்கிக் கொண்டமை கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுக்கு கடும் ஆத்திரத்தைத் தந்தாலும் கூட்டமைப்பு என்ற பெயரைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் அனைவரும் அமைதி காத்துக் கொண்டனர்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொதுத்தேர்தல் நடந்து முடிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு- கிழக்கில் வெற்றியீட்டியது என்ற முடிவு கிடைக்கப் பெற்றது.

கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனுக்கான தோல்வியாகக் காட்ட வடக்கு மாகாண சபையின் இளம் உறுப்பினர்கள் சிலர் முற்பட்டனர்.

வீட்டிற்கு வெளியே வந்து உங்கள் பொன்னான வாக்குகளை அளியுங்கள் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் விடுத்த வேண்டுகோளை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு ஆதரவாகவே அந்த அறிக்கை விடப்பட்டதாக கதை கட்டியவர்களே கூட்டமைப்பின் வெற்றியை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கான சவாலாகக் காட்டிக் கொண்டனர்.

இதில் இளம் உறுப்பினர் ஒருவர் முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனைப் பார்த்து நீங்கள் விரும்பியவர்கள் வென்றார்களா? என்று கேட்க, அதற்கு நான் விரும்பியவருக்குத்தான் அதிகூடிய வாக்கு என்று முதலமைச்சர் பதிலளித்ததான தகவல்களும் உண்டு.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர்தலில் வெற்றியைப் பெறமுடியாமல் போனதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சா ளர் என்ற பதவியை சுரேஷ் பிறேமச் சந்திரன் இழந்தார். அவரின் இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டார். தேசிய அரசாங்கம் அமைக்க வருமாறு ரணில் விக்கிரம் சிங்க அழைப்பு விடுத்த அதே நேரம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுமென்ற ஊகங்களும் பரவிக் கொண்டன.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஒரு போதும் ஏற்கமாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அறிவித்திருந்தார். அவரின் அறிவிப்பு தனக்கான ஒரு பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் இருந்தது. அதாவது ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் என்ற ஒரு சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவராக தான் இருப்பது போர்க்குற்ற விசாரணையில் இருந்து தன்னைக் காப்பாற்றுகின்ற முயற்சிக்கு ஊறு விளைவிக்குமென்ற காரணத்தாலேயே மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வேண்டாம் என்றார்.

அது மகிந்தவின் மிகப் பெரிய இராஜதந்திரம் எனலாம். அதேவேளை எதிர்க் கட்சித் தலைவர் பதவி எங்களுக்குரியதல்ல. அது மகிந்த தரப்புக்குரியது. எங்களுக்குப் பொருந்தாதது- உரிய முறையில் கிடைக்காததை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்று சொல்ல வேண்டிய இரா.சம்பந்தர் அப்படி எதையும் சொல்லாமல் இதோ பாருங்கள் அ.அமிர்தலிங்கத்திற்கு அடுத்தபடியாக எதிர்க் கட்சித் தலைவர் என்ற பெருமையை எனதாக்குகிறேன் என்றவாறு இரா. சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொண் டார். சிங்களவர்களுக்கு கிடைக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தனக்குத் தருகிறார்களே. இதற்குள் ஏதோ சூக்குமம் உண்டென்று சம்பந்தர் நினைத்திருந்தால், பின்னாளில் தமிழர்களுக்கு நடந்த எத்தனையோ விபரீதங்கள் இல்லாமல் போயிருக்கும்.

(வளரும்)

-புருசோத்தமன்-


இரணைமடு குளத்தின் மேற்கு கரையில் யோகர் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட கனகாம்பிகை அம்மன் கிளிநொச்சி மக்களுக்கு முக்கியமாக இரணைமடு குளத்தின் கீழான விவசாயிகளுக்கு நம்பிக்கை தரும் ஆலயமாக விளங்கி வருகிறது. இந்நிலையில் இரணைமடு கனகாம்பிக்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான பக்கதர்கள் படைசூழ கனகாம்பிகை அம்மன், முருகன், பிள்ளையார் ஆகியோர் மூன்று தேர்களில் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். இன்று பூங்காவனம் நடைபெறும்.

(படங்கள்-பரந்தன் செய்தியாளர்)

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை செயற்படுத்த முயன்றால் மக்களின் போராட்டம் வெடிக்கும்

## சிவமோகன் எம்.பி.எச்சரிக்கை



"அமைச்சரவையினால், புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை செயற்படுத்த முயன்றால், மக்கள் போராட்டம் வெடிக்கும்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் எச்சரித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,"தற்போது உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே கடந்த காலங்களில் அரசை போர்க்குற்றம், இனப்படுகொலை குற்றங்களுக்குள் தள்ளி விடக்காரணமாக அமைந்தது. அப்படியிருக்க புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச விழுமியங்கள் சார்பாக அமைய வேண்டுமென அனைவரும் விரும்பினர். அதற்காக சர்வதேச சட்ட நியதிகள் உள்ளடங்கிய செயற்பாட்டுப் பட்டறை ஒன்று கூட நாடாளுமன்ற குழு அறையில் நடைபெற்றது.

இன்று அனைத்தையும் பின்தள்ளி மீண்டும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடக்கூடிய புதிய ஜனநாயக விரோத கருத்துகளை உள்வாங்கி, இந்தக் கூட்டாச்சி அரசாங்கம் நிறைவேற்ற முற்படுவது கண்டனத்துக்குரியது.

முன்னர் தனித்து நின்று செயற்பட்ட பேரினவாதக் கட்சிகள் இன்று ஒன்று சேர்ந்து தமிழரின் இருப்புக்களை கேள்விக்குறியாக்கி வருகின்றன. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டின் பிரஜைகளின் மனித உரிமைகளை மற்றும் தனிமனித உரிமைகளை மீறும் செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன்.

வெறுமனே வாய்ச் சொல்லாக படையினர் சுமத்தும் குற்றங்களுக்காக, தமிழர்கள் மீண்டும் வருடக்கணக்கில் விசாரணைகள் இன்றி அடைக்கப்படுவதற்கும் அவர்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்கி, அடக்கியாள இந்த அரசாங்கம் முற்படுகிறதா, என்ற சந்தேகம் வலுத்து வருகிறது.

எனவே, சர்வதேச விழுமியங்களை மீறிய பயங்கரவாதத் தடுப்புச் சட்ட கருத்துக்கள் உடன் நீக்கப்பட்ட பின்னரே அந்த சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு எடுத்து வரப்பட வேண்டும். மீறி செயற்ட்டால் தமிழர் விடுதலையை முடக்கிய சர்வதேசத்தின் செவிப்பறையில் எமது மக்கள் போராட்டம் ஓங்கி அடிக்கும் காலம் வெகு தூரமில்லை" எனத் தெரிவித்தார். (2-5)




## முதலாமாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(பூநகரி)

பூநகரி தம்பிராய் கிராமத்தில் அரச அங்கீகாரம் பெற்று இயங்கி வரும் சின்னத்துரை குழந்தைகள் நிறுவனத்தின் முதலாம் ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தம்பிராய் அன்னை அகவளாகத்தில் நிறுவனத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஷ்ணேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக 661 ஆவது படைப்பரிவின் பிரிகேட் கொமாண்டர் ஜெயவர்தனா, பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். கபில பண்டார, கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லபதில் தலைவர் பொன்.நித்தியான்ந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் குழந்தை நிறுவன மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெறும். (2-5-84)

## வாகன விபத்தில் ஒருவர் காயம்

வவுனியாவில் நேற்று நடைபெற்ற வாகன விபத்தல் ஒருவர் காயமடைந்துள்ளார். வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் இந்த விபத்து நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியாவிலிருந்து ஏ9 வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அதே பாதையில் பயணித்த சொகுசு வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேலும் குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியே காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# எத்தனை நாட்களுக்கு வீதியில் அவல வாழ்க்கையை வாழ்வது?

## கேப்பாபிலவு மக்கள் கவலை



யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள் குடியேறியும் தமக்கு நிரந்தரமான வாழ்விடமின்றி தெருவோரத்தில் அலைந்து திரிவதாக கவனயீர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பூர்வீகக் கிராம மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனை விடுவித்து, தமது சொந்த நிலங்களில் வாழ அனுமதிக்க வேண்டுமெனக் கோரி நேற்று71ஆவது நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் கேப்பாப்பிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு இராணுவத் தலைமையக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக கூடாரம் அமைத்து 41



மீனவக் குடும்பங்களும் 97 விவசாயக் குடும்பங்களும் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தம் காரணமாக வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழந்த போதிலும், கடந்த ஏழு வருடங்களாக பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கி வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் 71 நாட்களாக போராடிவரும் தாங்கள் பல நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகியிருப்பதாகவும் வீதியில் எத்தனை நாட்களுக்கு அவல வாழ்க்கை வாழ்வதென்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

தமது சொந்த நிலங்களின் வளங்களை இராணுவத்தினர் அனுபவித்து வரும் நிலையில், தாம் வீதியில் வாழும் நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமக்கு தீர்வு கிடைக்கும் வரை, எந்த இடர்கள் வந்தாலும் சொந்த மண்ணில் கால் பதிக்கும் வரை வீதியில் இருந்து போராடுவோம் என்றும் கேப்பாபிலவு மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-5-281)

# அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருமாறுகோரி கவனயீர்ப்பு



(மல்லாவி)

அடிப்படை வசதிகள் கோரி நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரும்புகள் பெண்கள் சம்மேளனம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். நண்பகல் 12 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு, கிராஞ்சி, நாச்சிக்குடா,இரணை மாதா நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் அமைப்புக்கள் இணைந்து தமது பிரதேசத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.



குறித்த பிரதேசங்களில் காணப்படும் குடிநீர், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி மற்றும் இரணைதீவு மீள் குடியேற்றம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து குறித்த அமைதி வழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த அமைதிப் போராட்டம் மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு அரசாங்க அதிபருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டது. குறித்த மகஜர் கிளிநொச்சி மாவட்ட உதவி பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (2-5-15)

# இராமர் அணையில் மீன்பிடித்தொழில் செய்ய கடற்படையினர் தடை உத்தரவு

## தலைமன்னார் கடற்றொழிலாளர்கள் பாதிப்பு


(மன்னார்)

தலைமன்னார் தொடக்கம் தனுஷ்கோடி வரைக்கும் இடைப்பட்ட பகுதியில் இராமர் அணை (மணல் திட்டுக்கள்/ தீடை) உள்ளது.

இவ் அணையில் இன்று 25 இற்கு மேற்பட்ட சிறிய சிறிய தீவுகள் காணப்படுகின்றன.

இத் தீவுகளில் 500 வருடங்களுக்கு முன்னர் எமது முன்னோர்கள் கடற்றொழில் செய்து வருகின்றனர். இவ்வாறு பாரம் பரிய தொழில் செய்து வந்த இராமர் அணையில் அண்மையில் கடற்படை அதிகாரிகள் இனிமேல் இராமர் அணையில் மீன்பிடிக்கக் கூடாது, தங்கி நின்று தொழில் செய்யக் கூடாது எனக் கூறியுள்ளதாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். கடற்படை அதிகாரிகளின் இத் தீர்மானத்தினால் மீனவர்கள் பாதிப்பை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் ராமர் அணையிலிருந்து தலைமன்னார் பிரதேசம் 3கி.மீ தொடக்கம் 16கி.மீ தொலைவைக் கொண்டது. இதனால் தொழிலுக்கு அடிக்கடி வந்து போவதனால் எரிபொருள் செலவு அதிகரிக்கும்.



பொருத்தமான சந்தர்ப்பத்தில் மீன்களைப் பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். அதாவது மீனுக்காக அணையில் காத்திருந்து மீன்களைப் பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். (வலைச்சல் வலை பாச்சுவலை, அடசல்வலை)

எமது கடல் உபகரணங்கள், சொத்துக்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உதாரணமாக பாச்சு வலையினை இராமர் அணையில் இருந்து அதனுடைய கொடிகளைக் கண்காணிக் காதுவிடின் பலர் திருடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் எமக்கு சொத்து இழப்பு ஏற்படுவதனால் மனச் சோர்வு ஏற்படுகின்றது.

படகு அல்லது இயந்திரம் பழுதடையும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பாக தரித்திருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் உயிராபத்துக்கூட நேரிடலாம்.

80% மான தொழிலாளிகள் மனித வலுவைக் கொண்டு தொழில் நடவடிக்கைகளில் இவ் இராமர் அணையில் மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக 100 இற்கு மேற்பட்ட தெப்பத் தொழிலாளிகள், 5 அடசல் வலைத் தொழிலாளிகள், 400 இற்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் படகு உரிமையாளர்கள் போன்றோர் இவ் அணையையே நம்பியுள்ளனர். தமது தொழில் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். கடற்படை அதிகாரிகளின் தடையினால் இத்தொழில்கள் அனைத்தும் பாதிக்கப்படும்.

எனவே இப் பிரச்சினைக்கு தீர்வுகாண அண்மையில் தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலயத்தில் மீனவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தமது பிரச்சினைகளை பங்குத் தந்தை நவரட்ணம் அடிகளார் மற்றும் மீனவர் சங்க தலைவரிடம் முறையிட்டதுடன் தமது ஆதங்கங்களையும் தெரிவித்தனர்.

இதனால் இப் பிரச்சினைக்குரிய தீர்வினை அகிம்சை முறையிலேயே அடைவோம் எனக்கூறி சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு எமது மன வருத்தத்தை தெரிவிப்பதுடன் எமது தேவைகளையும் கடிதம் மூலம் தெரிவிப்போம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எமது சகோதர கிராமங்களான தலைமன்னார் பியர், தலைமன்னார் ஸ்ரேசன் இத் தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டதுடன் தீவில் உள்ள அனைத்து கிராமங்களின் உதவியையும் பெற்று அனைவரும் இவ் இராமர் அணையின் பயனைப் பெற்று முன்னேற்றமடைய ஒன்று திரள்வோம் எனக் கூறி ஒன்று கூடல் நிறைவுற்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், மறை மாவட்டக் குருக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள் இவ் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி இப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வுகாண அனைவரும் ஒன்று திரளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-5)

# சொந்த ஊரில் கால்பதிக்கும் வரை போராட்டத்தை கைவிடோம்

## இரணைதீவு மக்கள் உறுதி






கிளிநொச்சி பூநகரி இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த இடத்திற்குச் செல்வதற்கான கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 10 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. வளமாகவும் ஆரோக்கியமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டு 24 வருடங்கள் ஆகின்றன. எங்களை மீண்டும் ஊருக்குச் செல்ல விடுங்கள் எனக் கண்ணீருடன் இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சொந்த ஊருக்குச் செல்வதற்கான கவனயீர்ப்புப் போராட்டம் 10 ஆவது நாளாகவும் தொடர்கிறது. ஊருக்கு போகாமல் தங்களின் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மக்கள் உறுதியாகத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (2-5-312)

# இளங்கோ அடிகளாரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





(வவுனியா)

தமிழ் விருட்சம் அமைப்பு, கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், நகர வரியிறுப்பாளர்கள் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இளங்கோ அடிகளாரின் நினைவு தினம் நேற்று காலை 8.30 இற்கு கோவிற்குளம் சிவன் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அடியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் நகரபிதா சந்திரகுலசிங்கம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வ.பிரதீபன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசீன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன். அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் அமைப்பாளர் வ.பிரதீபன் மற்றும் உறுப்பினர் இந்துஜன் சிவன் கோவில் அன்பக சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் தமிழ் மணி அகளங்கன் உரையும் ஆற்றினார். (2-5)

# 50 நாட்களைக் கடந்தும் எமக்கு விடிவு கிடைக்கவில்லை

## பன்னங்கண்டி மக்கள் ஆதங்கம்





(பரந்தன்)

கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கமம் மற்றும் ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற்றும் அடிப்படை வசதிகள் நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை




கிடைக்கவில்லை. எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம் இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை வழங்குங்கள் எனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று புதன்கிழமை தீர்வின்றி 50 ஆவது நாளை எட்டியுள்ளது.

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5-312)

# வவுனியா சிறைச்சாலை கைதிகள் 12பேர் விடுதலை

(வவுனியா)

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றங்கள் அல்லாத சிறிய தவறுகளை செய்தவர்கள் மற்றும் அபராதப் பணத்தைச் செலுத்த முடியாமல் சிறையில் இருந்த 12 ஆண்கள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக வவுனியா சிறைச்சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-5)



### வசிம் தாஜுடீன் கொலை வழக்கு

# சட்ட வைத்திய அதிகாரி முன் பிணைகோரி தாக்கல் செய்த மனு மீது விசாரணை

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட முன்னாள் பிரதான சட்ட வைத்திய அதி காரி யான பேராசிரியர் ஆனந்த சமர சேகர, தனக்கு முன் பிணை வழுங் குமாறு கோரித் தாக்கல் செய்த மனு தொடர் பான விசாரணைக் கான தினமாக, ஜூலை மாதம் 7ஆம் திக தியை கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று முன்தினம் குறித்தது.

வசீம் தாஜுடீனின் உடற்பாகங்கள் காணாமல் போனமை தொடர் பில் தான் கைது செய்யப்படலாம் என்ப தால், தனக்கு முன் பிணை வழுங்கு மாறு கோரியே அவர் இந்த மனு வைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு மீதான விசாரணை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். குருசிங்க முன்னிலையில் எடுத் துக் கொள்ளப்பட்ட போது, சைட்டத்தி லிருந்து (தொழில் நுட்பத்துக்கும் மருத்து வத்துக்குமான தெற்காசிய நிறுவகம்) மீட்கப்பட்ட உடற்பாகங் கள் தாஜுடீனினுடையவை அல்ல என, பரிசோதனைகளில் இருந்து தெரி ய வந்துள்ளது என, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க, மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

எனினும், தாஜுடீனின் மரணச் சான்றிதழ் வழங்கியமை தொடர் பான விசாரணைகள் இடம் பெற்று வருவதனால், அவருக்கு முன் பிணை வழங்குவதற்கு, தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

ஊடகங்களில், தான் கைது செய் யப்படலாம் என செய்தி கள் வெளி வருவதாலேயே, தனது சேவை பெறுநரால் முன் பிணை கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டதாக, ஆனந்த சமரசேகர சார்பில் ஆஜரான ஜனாதி பதி சட்டத் தரணி ஷவீந்திர பெர்னா ண்டோ, அறிவித்தார்.

இதனையடுத்தே, இந்த முன் பிணை மனுத் தொடர்பான விசார ணைக்கு திகதி குறிக்கப்பட்டது. (இ-7)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
077 784 1558
(8168)

வேலைவாய்ப்பு
SOND நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பாளர், வெளிக்களப் பணியாளர்கள் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு) தொழில்நுட்ப உத்தி யோகத்தருக்கான பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர் களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.
(Visit www.sond.lk for Vacancy Notice)
முடிவுத் திகதி: 21.05.2017 தொடர்பு: senthu@eureka.lk
077 224 2394
(8967)

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

இரத்தினபுரி, குட்சேட் வீதி யில் செலான் சந்தி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளை ஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது மோட்டார் சைக் கிள் பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி இரத்தினபுரி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்லேல்ல, இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒரு வரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக பேருந் தின் சாரதி கைது செய்யப்பட்டுள் ளதுடன், இரத்தினபுரி பொலி ஸார் மேலதிக விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## 51 மாடுகள் மீட்பு

(கொழும்பு)

வெசாக் போயா தினத்தன்று இறைச்சிக்காக வெட்ட வைத்திருந்த 51 மாடுகளை காப்பாற் றியிருப்பதாக பாணந்துறை வலான ஊழல் ஒழிப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்து ள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மாடுகளில் 26 பசுக்களும், 25 காளை மாடுகளும் காணப்பட்ட தாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாடுகள் அக்குரஸ்ஸ மற்றும் தங் கல்லை ஆகிய பிரதேசங்களிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் :அனுசம்<br>கி.பா:36<br>உயரம்: 5'10"<br>தகைமை/<br>தொழில்:BScபொறியியளாளர்<br>தொ.இ: B/7308 | பிறப்பு : 1991 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை<br>கி.பா: 14செவ் 1 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/7314 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் : மகம்<br>உயரம் : 175cm<br>தகைமை/தொழில்:BScகனடா<br>PRஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7309 | பிறப்பு : 1993 இந்து<br>நட்சத்திரம் : சதயம் செவ்12ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BFA<br>தொ.இ: G/7317 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>உயரம் : 165cmதகைமை/<br>தொழில்:BSc/பொறியியளாளர்<br>தொ.இ: B/7310 | பிறப்பு : 1991 இந்து<br>நட்சத்திரம் :அவிட்டம்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/7320 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் : உத்தரட்டாதி<br>உயரம்: 5'6"தகைமை/<br>தொழில்:Civil Eng/அரசதொழில்<br>தொ.இ: B/7311 | பிறப்பு : 1979 இந்து<br>நட்சத்திரம் : ரேவதி சூரிசெவ் 2ல்<br>தகைமை/தொழில்: 6ம் தரம்<br>தொ.இ: G/7322 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## சம்மாந்துறையில் ஒன்பது வயதுச் சிறுவன் மரணம்

அம்பாறை மாவட் டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் ஒன்பதுவயதுச்சிறுவன் ஒருவன்தனது வீட்டில் உயிரிழந்த நிலை யில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறைஏழாம் பிரிவைச் சேர்ந்த அப்துஸ்ஸலாம்தாலிக் அஹமட் எனும் நான் காம் வகுப்பில் கல்வி பயின்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தி னம் பிற்பகல் வேளை யில் வீட்டின் சமை யலறையில் வேலை செய்து கொண் டிருந்த சிறுவனின் தாய், பூட்டிய நிலையில் இருந்த படுக்கைய றையை திறந்த போது மகன் உயிரிழந்தது போன்ற நிலையில் கிடைப்பதைக் கண்டு, வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றுள்ளார்.

வைத்திய பரி சோதனையின்போது சிறுவன் உயிரிழந் திருப்பதை வைத்தி யர்கள் உறுதி செய் துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மரணம் குறித்து விசாரணை கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரி சோதனைக்காக சம் மாந்துறைஆதாரவைத் தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. (இ-7)

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்
இயல் இசை நாடக அரங்கு 2017
11.05.2017
இரண்டாம் நாள் வியாழக்கிழமை

இடம் :- இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்
நேரம் :- பிற்பகல் 4.30 மணி
தலைவர் திரு.பா.பாலகணேசன்
(விரிவுரையாளர்- தேசிய கல்வியற்கல்லூரி , யாழ்ப்பாணம்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர். R.விக்னேஸ்வரன்
(உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)
சித்தார்த்தன் , பிரதித்தன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை
நாதஸ்வரம்: திரு P. சித்தார்த்தன், திரு P. பிரதித்தன்
தவில்: திரு சு.விபூஷணன், மானிப்பாய் அமரன்
மங்கல விளக்கேற்றல்
திருமுறை ஓதுதல் :- செல்வன் கண்ணதாஸ் தமிழ் வேந்தன் (ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மன்ற மாணவன்)
ஆசியுரை :- அருட்திரு. ஜெரோ செல்வநாயகம் (அதிபர், சென் பற்றிஸ் கல்லூரி. நிர்வாக இயக்குநர் திருமறைக்கலாமன்றம்)
வாழ்த்துரை :- "இசைவாணர்" எம்.கண்ணன் (மூத்த இசையமைப்பாளர்)

சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவ சிறுவர் இல்ல" மாணவர்கள் வழங்கும்
கோலாட்டம்
நட்டுவாங்கம் :- திருமதி.யாழினி ரதீஸ்வரன்
பாட்டு :- திருமதி.வத்சலா கருணாகரன்
வயலின் :- திருமதி.இந்துமதி தயாபரன்
மிருதங்கம் :- திரு. T.சிவகுமார்.
கவிதை மழை
அரியாலையூர் செல்வி.மிஷாந்தி செல்வராஜா வழங்கும் "முத்தமிழ் இனிமை"
இசை விருந்து
பாட்டு : திரு.N.பரந்தாமன், திரு.S.சிவமைந்தன்
வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு. நல்லை:க.கண்ணதாஸ்
கெஞ்சிரா : திரு. ஞா.வசந்
முகர்சிங் : திரு. சதீஸ்குமார்
"தொன்மம்" கலைக்குழுவினர் வழங்கும்
பறை இசை நடனம்
"நிருத்திய கீதாலயம்" மாணவிகள் வழங்கும்
நிருத்தியாஞ்சலி
நட்டுவாங்கம் : திருமதி. அகல்யா ராஜபாரதி
பாட்டு : திருமதி. சுகந்தி இராட்ணேஸ்வரன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு. S.துரைராஜா
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் வழங்கும்
மாமிக்கு வாச்ச மருமகள்
(நகைச்சுவை நாடகம்)
- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
வசந்தம் வில்லிசைக் குழுவினர் வழங்கும் "நாவலர் இன்று இருந்திருந்தால்"
வில்லு : திரு.S.K.N.தவராசா
நன்றியுரை பக்கப்பாட்டு : திரு.K.சுரேஸ்மோகன்
ஆர்மோனியம் : திரு.S.சண்முகலிங்கம்
தபேலா : திரு.S.நிமலன்
கடம் : திரு.K.றஜீவன்
நன்றியுரை
கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
63,கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர்.
அனுமதி இலவசம்
விளம்பர அனுசரணை :- ஐடியல் அக்கடமி
(C-8535)

# உலக இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில்

# இலங்கைக்கு வெள்ளிப் பதக்கத்தை பெற்றுத்தந்த மாணவன் ரகிந்து ரன்திவி ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

40 நாடுகள் பங்கு பற்றிய உலக இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில் முதற் தடவையாக இலங்கைக்கு வெள்ளிப் பதக்கத்தை பெற்றுத்தந்த கொழும்பு நாலந்தா கல்லூரியில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ரகிந்து ரன்திவி விக்ரமரத்ன நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை சந்தித்தார்.



உலக இளம் விஞ்ஞானிகள் மாநாடு ஏப்ரல் 16 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை ஜேர்மன் ஸ்ருட்காட் நகரில் நடைபெற்றது. ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற முக்கிய நாடுகளிலிருந்து 300 பேர் பங்குபற்றியிருந்தனர்.

மாணவர் ரவிந்து ரன்திவி சுற்றாடல் விஞ்ஞான பிரிவில் தயாரித்த சுற்றாடல் நிலமைகளால் மரங்களிலுள்ள மகரந்தங்களில் படியும் மாசடைந்த வளியினால் ஆஸ்த்மா நோய் மேலும் தீவிரமடைவது தொடர்பில் மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக இந்த வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

மாணவனின் திறமையைப் பாராட்டி பரிசொன்றை வழங்கிய ஜனாதிபதி, மாவனின் எதிர்காலத்துக்காக தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (இ-3)

# வட மத்திய சுகாதார அமைச்சர் நீக்கம்

(கொழும்பு)

வட மத்திய மாகாண சபையின் சுகாதாரம், சுதேச மருத்துவத்துறை, சமூக நலம் மற்றும் மாகாண அலுவல்கள் அமைச்சர் கே.எச். நந்தசேன அவரது அமைச்சுப் பதவியில் இருந்து நேற்று திடீரென நீக்கப்பட்டுள்ளார். (இ-7)

# இருவர் வெட்டிக் கொலை மாணவி மர்ம மரணம்!


கொஸ்கொட பிரதேசத்தில் 38 வயது தாய் மற்றும் 6 மாத குழந்தை ஆகியோர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதேவேளை, மொரட்டுவை பல்கலைக் கழகத்தை சேர்ந்த மாணவியொருவரும்மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொறியியல் பீடத்தில் பயின்ற 27 வயதுடைய மாணவி, திங்கட்கிழமை இரவு குளியலறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தனது திட்ட அறிக்கையை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

# அமைச்சரவை இணைப் பேச்சாளராக தயாசிறியை நியமிக்க சு.க. அனுமதி



அமைச்சரவை இணைப் பேச்சாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவை நியமிக்கக் கட்சியின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

முன்னதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பாவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்த போதும், அவர் அந்தப் பதவியை நிராகரித்துள்ளதாக அக்கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, கயந்த கருணாதிலக ஆகியோர் கடமையாற்றி வருகின்ற நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஒரு அமைச்சரவை பேச்சாளர் நியமிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோரின் அனுமதி கிடைக்கப்பட்டதன் பின்னர் தயாசிறி ஜயசேகரவின் பெயர் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்மொழியப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அமைச்சரவைப் பேச்சாளர்- ராஜித

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அமைச்சரவைப் பேச்சாளர் இருப்பது ழிகவும் சிறந்தது என அமைச்சரவை இணைப் பேச்ளாரான அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்திம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் ராஜித சேனாரட்ன இவ்வாறு கூறியுள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்




## திருமதி. மார்க்கண்டு இராசம்மா

காரைநகர், களபூமி, கல் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் இல.83/9, தஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. மார்க்கண்டு இராசம்மா அவர்கள் செவ்வாய்க்கிழமை (09.05.2017) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு(வையாபுரி) – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமு – பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம், சரஸ்வதி, காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற பூபாலசிங்கம், அன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் மங்கையர்க்கரசி, சிறீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத்தாயாரும் தில்லைநாதன், காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதன், ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப்பேத்தியும் சேஷ்தரெனின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி மங்கையக்கரசி, திருமதி சரஸ்வதியம்மா, பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை மற்றும் திருமதி சிவஞானம் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2017 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-8537) **தகவல் : ப.மார்க்கண்டு(கணவர்), தொ.பே : 021 - 2221983**

# பன்றிக் காய்ச்சலால் 185 பேர் உயிரிழப்பு



(மும்பை)

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பன்றிக்காய்ச்சலுக்கு இதுவரை மொத்தம் 185 பேர் உயிரிழந்துள்ளனர் என மாநில அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகப்படியாக ஜனவரி மாதத்தில் மட்டும் 55 பேர் பன்றி காய்ச்சல் பாதித்து உயிரிழந்துள்ளனர்.

புனேவில் அதிகபட்ச உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஜனவரி முதலாம் திகதி முதல் மே 8ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மட்டும் H1 N1 வைரஸ் மூலம் 185 பேர் உயிரிழந்துள்ளனர் என மகாராஷ்ட்ரா மாநிலத்தின் குடும்பநல மையத்தின் இணை தலைவர் முகுந்த் டிகிக்கர் தெரிவித்துள்ளார்.

மாவட்டம் வாரியாக பார்க்கும் போது புனேவில் அதிகபட்சமாக 55 பேர் பன்றிக்காய்ச்சல் மூலம் உயிரிழந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து நாஷிக் மாவட்டத்தில் 26 பேர் மற்றும் அகமத்நகரில் 17 பேர், அமராவதி மாவட்டத்தில் 8 பேர், அகோலா மற்றும் சோலாப்பூர் மாவட்டங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-3)

# சேகர் ரெட்டியை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் ஓ.பி.எஸ்ஸே

## அமைச்சர் சி.வி.சண்முகம் சுட்டிக்காட்டு

(சென்னை)

தமிழகத்திற்கு சேகர் ரெட்டியை அறிமுகம் செய்து வைத்தவரே ஓ.பன்னீர்செல்வம் தான் என சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை கிரீன்வேஸ்சாலையில் உள்ள அவரது வீட்டில் நிருபர்களிடம் கூறியதாவது,

ஓ.பன்னீர்செல்வத்திற்கும், சேகர் ரெட்டிக்கும் உள்ள தொடர்பு குறித்து விசாரணை ஆணையம் அமைத்து விசாரித்தால் ஓ.பி.எஸ். சந்திக்க தயாரா?

தமிழகத்திற்கு சேகர் ரெட்டியை அறிமுகம் செய்து வைத்தவரே ஓ.பன்னீர்செல்வம்தான்.



டைரியில் 4, 5 பெயர்கள் இருப்பதாக சொல்லி விசாரிக்க கூறுகிறீர்கள். சேகர் ரெட்டியுடன் ஓ.பி.எஸ்க்கு உள்ள தொடர்பை ஏன் விசாரணை நடத்தவில்லை.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சிறையில் இருந்த போது திருப்பதி தேவஸ்தான உறுப்பினராக சேகர் ரெட்டியை ஆக்கியவர் ஓ.பி.எஸ். தான்.

இதற்கெல்லாம் ஓ.பன்னீர்செல்வம் பதில் சொல்ல தயாரா? நம்பியார், அசோகன் போல அருகருகே நின்று 'போஸ்' கொடுத்த போட்டோவுக்கு என்ன அர்த்தம். இவ்வாறு சி.வி.சண்முகம் கேள்வியெழுப்பினார். (இ-3)

# மக்களிடம் மனு பெற்ற பன்னீர்



(போடி)

முன்னாள் தமிழக முதலமைச்சரும், போடி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஓ.பன்னீர்செல்வம் தனது சொந்த ஊரான பெரியகுளத்திற்கு நேற்று முன்தினம் வந்தார்.

பின்னர் அங்கிருந்து மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதனைத் தொடர்ந்து மாலையில் கட்சி நிர்வாகிகளையும், பொது மக்களையும் சந்தித்து ஆலோசனைகள் கேட்டார்.

அப்போது பொதுமக்கள் ஓ.பன்னீர்செல்வத்தை பார்க்க வந்தனர்.

அவர்கள் தொகுதியில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் அதனை நிறை வேற்றி தருமாறும் அவரிடம் கேட்டுக் கொண்டனர். (இ-3)


# விஜய் மல்லையாவை ஜுலை 10ஆம் திகதி உச்ச நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

(டில்லி)

வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துமாறு பிறப்பித்த உத்தரவை நிறைவேற்ற தவறியதற்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சந்தித்து வரும் பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா எதிர்வரும் ஜுலை மாதம் நேரில் ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பல்வேறு வங்கிகளில் சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் பெற்று மோசடி செய்துள்ள பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையாவுக்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக அவருக்கு பிணையில் வெளிவர முடியாத பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த கடன் மோசடி தொடர்பாக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.




இதன் அடிப்படையில் அமுலாக்க பிரிவினரும் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் மல்லையாவுக்கு எதிராக காசோலை மோசடி வழக்குகளும் நிலுவையில் உள்ளன. தற்போது லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

விஜய் மல்லையாவுக்கு எதிராக வங்கிகள் சம்மேளனம் வழக்கு தொடர்ந்து உள்ளது.

இது தொடர்பான வழக்கில், நீதிமன்றத்தில் தவறான தகவல்களை அளித்ததாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் விஜய் மல்லையா குற்றம் செய்துள்ளது நிரூபணம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம் எதிர்வரும் ஜுலை 10ஆம் திகதி நேரில் ஆஜராகி தண்டனை விதிப்பது தொடர்பான எதிர்த்தரப்பு வாதத்தில் பங்கேற்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. (இ-3)

# சோமாலியா இராணுவத் தளம்மீது அல் ஷபாப் தீவிரவாதிகள் தாக்குதல்



(மொகாடிஷு)

சோமாலியாவில் இராணுவ தளத்தின் மீது அல் ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பல வீரர்கள் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சோமாலியா அரசாங்கத்தை வீழ்த்த அல்-ஷபாப் தீவிரவாதிகள் தொடர்ச்சியாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்வேறு நகர்ப்புறங்களில் ஆதிக்கம் செலுத்திய அல்ஷபாப் தீவிர வாதிகளை ஆபிரிக்க யூனியன் மற்றும் சோமாலி படைகள் விரட்டியடித்துள்ளன.

ஆனால், சிறிய மற்றும் தொலைதூர கிராமப் புறங்களை அவர்களிடம் இருந்து பாதுகாக்க போராடி வருகின்றன.

இந்நிலையில், தலைநகர் மொகாடிஷுவில் இருந்து சுமார் 250 கி.மீ. தொலைவில் உள்ள சோமாலி இராணுவ தளத்தின் மீது அல் ஷபாப் தீவிர்வாதிகள் நேற்று திடீரென தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் ஏராளமான வீரர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலை தங்கள் படையின் 16 வீரர்கள் நடத்தியதாகவும், கூப்காடட் நகர் முழுவதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாகவும் அல் ஷபாப் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஆனால் இதனை அரசுத் தரப்பில் உறுதி செய்யவில்லை.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 7 வீரர்கள் இறந்ததாகவும், ஒரு இராணுவ டிரக் தீயில் கருகியதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# காணாமல் போன கடற்கரை மீண்டும் தோன்றிய அதிசயம்



(அயர்லாந்து)

அயர்லாந்தில் கடுமையான சூறாவளி காற்று மற்றும் கடல் சீற்றத்தால் 1984-ம் ஆண்டு காணாமல் போன கடற்கரை, திடீரென தோன்றிய அதிசயம் அங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அயர்லாந்தில் உள்ள தீவு அசில். இங்குள்ள சிறிய கிராமம் டூவாக். இங்கு 300 மீற்றர் நீளத்தில் அழகான கடற்கரை இருந்தது. இங்கு சுற்றுலாப்பயணிகள் வந்து சென்று கொண்டிருந்தனர்.

கடந்த 1984-ம் ஆண்டு திடீரென வசந்த கால சூறாவளி புயல் அடித்தது. கடலும் கொந்தளிப்பாக காணப்பட்டது. இதனால் கடற்கரை காணாமல் போனது.

கடற்கரையும் இருந்த இடம்தெரியாமால் போனது. பெரிய பெரிய பாறைகள் மட்டும் இருந்தன.

ஆனால், ஆங்காங்கே குளம் போன்று தண்ணீர் தேங்கி கிடந்தன. இதனால் சுற்றுலாப் பயணிகள் வரத்து குறையத் தொடங் கியது.

சுற்றுலாப் பயணிகள் வரத்து குறைந்ததால் கடற்கரை அருகில் இருந்த ஹோட்டல், கஃபே, ஹெஸ்ட் ஹவுஸ்களும் மூடப்பட்டன.

இந்நிலையில் கடந்த மாதம் தொடர்ந்து 10 நாட்களாக ஆச்சர்யம் அளிக்கும் வகையில், கடலில் வழக்கத்திற்கு மாறான அலை எழுந்தது. இந்த அலையானது, தொன் கணக்கில் மணல்களை கரைக்கு கொண்டு வந்து குவிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக காணாமல் போன கடற்கரை மீண்டும் உருவாகத் தொடங்கியது.

இந்த ஆச்சர்யமான சம்பவத்தை கண்டு அங்குள்ள மக்கள் மிகவும் சந்தோசம் அடைந்துள்ளனர். (இ-3)

# தென்கொரிய ஜனாதிபதித் தேர்தலில்

# மூன் ஜயே - இன் அபார வெற்றி

(சியோல்)

**தென்கொரியா ஜனாதிபதி தேர்தலில் லிபரல் கட்சி 41.1 சதவீத வாக்குகள் பெற்று அபார வெற்றி பெற்றதற்காக மூன் ஜயே - இன்க்கு அமெரிக்கா மற்றும் ஜப்பான் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளது.**



தென்கொரிய ஜனாதிபதியாக இருந்த பார்க் ஜியூன் - ஹை ஊழல் வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி தேர்தல் நடந்தது.

ஜனநாயக கட்சி சார்பில் மூன் ஜயே-இன்னும், கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளராக ஹாங் ஜோன்-பையோவும், அகின் சியோல்- சூ ஆகியோர் போட்டியிட்டனர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

தொடக்கத்தில் இருந்தே ஜனநாயக கட்சி வேட்பாளர் மூன் ஜயே-இன் முன்னணியில் இருந்தார். முடிவில் அவர் அபார வெற்றி பெற்றார். அவர் 41.1 சதவீத வாக்குகள் பெற்றார்.

கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர் ஹாங்ஜோன் பையோ 2-வது இடம் பிடித்தார். அவருக்கு 24.03 சதவீதம் வாக்குகள் கிடைத்தன. அகின் சியோல்-சூ 3-வது இடம் பிடித்தார். அவர் 21.4 சதவீத வாக்குகள் பெற்றார்.

மூன் ஜயே-இன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும் சியோல் நகரமே விழாக் கோலம் பூண்டது. அவரது ஆதரவாளர்களும்; கட்சி தொண்டர்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் ஆரவாரம் செய்தனர். புதிய ஜனாதிபதியாகும் மூன் ஜயே - இன்னுக்கு தென் கொரியாவின்நட்புநாடானஅமெரிக்காவாழ்த்துதெரிவித்துள்ளது. அண்டை நாடான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். (இ-3)

## தலை துண்டிப்பு தொடர்கிறது

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்து வரும் ரஷ்யாவை சேர்ந்த அதிகாரியின் தலையை துண்டித்து ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்ற வீடியோ காட்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் ஜன்ாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடி வரும் புரட்சிப் படையினர் மற்றும் அங்கு அதிரடி தாக்குதல்களின் மூலம் பலரை கொன்று குவித்து, அட்டூழியத்தில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆகியோருக்கு எதிரான வான்வழி தாக்குதலில் ரஷ்யா ஈடுபட்டு வருகிறது.

இதனால், ரஷ்யாவை முக்கிய எதிரியாக கருதும் ஐ.எஸ். தீவிரவாதிகள் ரஷ்யாவை சேர்ந்த விமானப் படை வீரர்களையும், உயரதிகாரிகளையும் பணயக் கைதியாக சிறைபிடித்து வைத்துள்ளனர். கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் பணயக் கைதிகளில் 300 பேரை அவர்கள் கொன்று குவித்துள்ளனர்.

இந்நிலையில், ரஷ்யாவைச் சேர்ந்த மேலும் ஒரு விமானப்படை அதிகாரியின் தலையை துண்டித்து கொன்ற வீடியோ காட்சியை ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்போது வெளியிட்டுள்ளனர்.

பாலைவனத்தின் நடுவில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அந்த பணயக் கைதி அமர்ந்திருக்கும் காட்சியும், ரஷ்யாவை சேர்ந்த மற்ற வீரர்கள் உடனடியாக சரணடைந்து விட வேண்டும் என்ற அவரது அறிவித்தலும் 12 நிமிட ஓடும் இந்த வீடியோவில் பதிவாகியுள்ளது. (இ-3)

# கொலரா நோய் தாக்கி ஏமனில் 34 பேர் பலி!



(சனா)

ஏமன் நாட்டில் கொலரா நோய் தாக்கி 34 பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏமன் நாட்டில் கடந்த இரண்டு வாரங்களாக கொலரா நோய் பாதிப்பு அதிக அளவில் காணப்பட்டு வந்தது. ஏராளமானோர் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், ஏமனில் கொலரா நோய் தாக்கி 34 பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக உலக சுகாதார நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில், கொலரா நோய் தாக்கி 34 பேர் உயிரிழந்துள்ளனர். 9 மாகாணங்களில் 2,022 பேர் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 27 முதல் மே 7 வரை இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்த ஆண்டில் மட்டும் இரண்டாவது முறையாக கொலரா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக வைத்தியசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இலட்சக்கணக்கான மக்கள் உணவு மற்றும் தூய்மையான குடிநீர் கிடைக்கப் பெறாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

உலக அளவில் சிரியா, தெற்கு சூடான், நைஜீரியா மற்றும் ஈராக் நாடுகளை போல் மனிதாபிமான அவசர நிலை உள்ள நாடாக ஏமன் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏமன் நாட்டில் ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக, சவுதி தலைமையிலான கூட்டுப் படை தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஏமனில்பதற்றமான சூழல்காணப்பட்டு வருகிறது. (இ-3)

# சுரங்கப்பாதையில் கோர விபத்து

## பேருந்து தீப்பிடித்ததில் 11 மாணவர்கள் மரணம்

(பீஜிங்)

சீனாவில் சுரங்கப் பாதையில் சென்று கொண்டிருந்த பாடசாலை பேருந்து விபத்தில் சிக்கி தீப்பிடித்ததில் 11 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஷாண் டாங் மாகாணத்தின் வெய்ஹாய் நகரில் உள்ள சர்வதேச மழலையர் பாடசாலைக்கு மாணவர் களை ஏற்றிக்கொண்டு ஒரு பேருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்டுசென்றது.

இந்த பேருந்து சுரங்கப் பாதைக்குள் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. அத்துடன் பேருந்து தீப்பிடித்து எரிந்தது.

இந்த கோர விபத்தில் 5 தென்கொரிய மாணவர்கள், 6 சீன மாணவர்கள் என 11 மாணவர்களும், பேருந்து சாரதியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அரசுத் தகவல் தெரிவித் துள்ளது.

விபத்து நடந்த பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப் படங்களை உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டன. அதில், சுரங்கப் பாதையின் நுழைவு



வாயிலில் இருந்து கரும் புகை வெளியேறுவது தெளிவாகத் தெரிந்தது. ஆபத்து விளைவிக்கும் வகையில் வாகனம் ஓட்டுவதை கட்டுப்படுத்த சீன அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆனாலும், விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள தகவலின் படி, சீனாவில் 2013ம் ஆண்டு 2.5 லட்சம் மக்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். (இ-3)





World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

# ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

- ★ All HND's are equal to NVQ Level 06
- ★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

RICS Accredited

## BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications

Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC Recognized

Week End Part Time Classes

» Duration: 1 Year

Progression Route to RICS BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited

Duration 2 Years

TVEC REGISTERED

# ICBT DUAL HNDs Software Engineering + Computing

- ★ All HND's are equal to NVQ Level 06
- ★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Cardiff Metropolitan University

UGC Recognized

## BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



World Class UK Degree @ICBT Jaffna Campus

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

# ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

## BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC Recognized

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited

# HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent Qualification

- ★ All HND's are equal to NVQ Level 06
- ★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Duration
- 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

## BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC Recognized

Recognised by ice Institution of Civil Engineers

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Entry Qualifications
- Higher National Diploma in Civil Engineering or any other accepted programs.

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

# அரசைக் கொண்டு செல்ல ஒற்றுமை மிகவும் அவசியம்

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி அட்வைஸ்

(கொழும்பு)

வாதங்கள் பேதங்களை மறந்து இந்த அரசை முன்னோக்கிச் செல்லுமாறு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றிலுள்ள அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சர்களான ஜோன் செனவிரத்ன மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கும் ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் நிலைத்த தன்மைக்கு இரு கட்சிகளினதும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் மிக அவசியமானது என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.



ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டால், அதனை தொடர்ந்தும் இழுத்துச் செல்லாமல், முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சரவையிலுள்ளவர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# காலி முகத்திடலில் 40 வீதத்தை தான் மகிந்த நிரப்பினார் - சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

மகிந்தவின் மேதின கூட்டத்தில் காலிமுகத்திடலின் 40 வீத பகுதியிலேயே மக்கள் கூட்டம் நிறைந்திருந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். மகிந்த அணியின் மேதின நிகழ்வு காலிமுகத்திடலில் இடம்பெற்றபோது கூட்டத்தில் 40வீத பகுதியிலேயே மக்கள்கூட்டம்நிறைந்திருந்தனர்

கண்டி கெட்டம்பேயில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு மகிந்தவின் மேதினத்தை காட்டிலும் அதிகமானோர் வந்திருந்தனர்.

எனினும் மகிந்த தரப்பினர் பொய்யான பலத்தை காட்டியுள்ளனர். குறைந்தளவு மக்கள்கூட்டம்என்பதற்காகவே மகிந்த தரப்பினர் மேதின ஊர்வலத்தை நடத்தவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார் (இ-7)

# இரட்டைக்குடியுரிமை விவகாரம்

## கீதா குமாரசிங்கவின் மனு தொடர்பாக உயர் நீதிமன்றில் நாளை திறந்த விவாதம்

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை விவகாரத்தால் கீதா குமாரசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்து கடந்த 3 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, அவர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் தான் செய்துள்ள மனுவின் தீர்ப்பை அறிவிக்கும் வரையில், தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை செயற்படுத்தாது இடைநிறுத்தி வைப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு நேற்று முன்தினம் முன்வைத்த மனுவில் அவர் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

இந்த மனு தொடர்பான விசாரணை நாளை வெள்ளிக்கிழமை திறந்த விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் நேற்று முன்தினமே அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும், இவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய, நேற்று முன்தினம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சரவை மாற்றம் குறித்து பேசப்படவில்லை - ராஜித தகவல்



(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக ஊடகங்கள் கடந்த சில நாட்களாக செய்திகளை வெளியிட்டுவந்தன.

இந்தநிலையிலேயே, நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை மாற்றம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதையும் பேசவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையின் பொருளாதாரம் 5 வீத வளர்ச்சியை எட்டாது

## ஐ.நா. அமைப்பு கணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மிகச் சிறிய வளர்ச்சியையே எட்டும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா. பொருளாதார சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக்கிற்கான ஐ.நா. பொருளாதார சமூக ஆணைக்குழுவின் ஆய்வு அறிக்கை - 2017 நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 2016ஆம் ஆண்டு 4.4 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டில் 4.8 வீதமாக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில், இது 4.9 வீதமாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டில், 5 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று கணித்திருந்த போதிலும், அதனை விட சற்று குறைவான வளர்ச்சியே ஏற்படும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா பொருளாதார சமூக ஆணைக் குழு கணித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பிறர் வீட்டில் நாம்

சிங்கத்தை அதன் குகையில் சந்திப்பது என்பது மிக வீரமான விடயம் தான். ஆனால் இதில் எச்சரிக்கையும் கூடுதல் கவனமும் அவசியம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பிறர் வீட்டிற்குள் நாம் நுழைகிற நேரம் தவறான நேரமாக இருந்துவிடக் கூடாது. உதாரணமாக இரவு ஒன்பது மணிக்கு மேல் எவரையும் போய் பார்ப்பதைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது. தவிர்க்க முடியாத காரணம் என்றால் தான் நேரம் கெட்ட நேரத்தில் செல்ல நமக்கு உரிமை வரும்.

எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும் காலையில் பிள்ளைகள் பள்ளிக்குப் புறப்படும் நேரத்திலும் பெரியவர்கள் அலுவலகத்திற்குப் புறப்படும் நேரத்திலும் சும்மா உங்களோடு பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் என்று நுழையக்கூடாது. மதியம் இரண்டிலிருந்து நான்கும் தவிர்க்கப்படலாம். காரணம் வீட்டில் உள்ளவர்கள் அசந்து போகும் நேரமிது.

ஒருவேளை தங்க நேர்ந்தால் ஒவ்வொன்றையும் கேட்டுக் கொண்டுதான் செய்ய வேண்டும். ரொம்பவும் உரிமை இருப்பதாக நாமே கற்பனை செய்து கொண்டு அவர்களுக்கு உரிமையான பொருட்களை எடுத்துக்கொண்டு கண்டபடி கையாளக்கூடாது.

ஒருவர் வீட்டிற்குப் போயிருக்கும் போது நாம் குறைவாகப் பேச வேண்டும். அவர்கள் வீட்டிற்குள் போய் உட்கார்ந்து கொண்டு நம்முடைய இஷ்டத்திற்குப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

நம் வீட்டில் எப்படி வேண்டுமானாலும் சௌகரியம் போல் உட்காரலாம். ஆனால் வெளி வீட்டில் அப்படி இல்லை. ஒழுங்காக உட்கார வேண்டும். குரலிலும் ஒருவிதப் பவ்வியத்தைக் கலந்து கொள்ள வேண்டும். இவை மற்றவர் வீட்டு வாசற்படியை மிதித்ததுமே தாமாக வர வேண்டும்.

எவ்வளவு தான் நம்மை ஒரு வீட்டினர் பிரியமாக நடத்தினாலும் என்னதான் இருந்தாலும் இந்த வீட்டில் நான் ஓர் அந்நியன் என்ற உணர்வு பொறுப்பு கலந்த பயத்துடன் இருக்க வேண்டும். அது ஒருவருடைய சொந்த சகோதரியின் வீடாக இருந்தாலும் சரி.

அந்த வீட்டின் குடும்பத்தலைவர் நமக்கு நண்பர் என்பதால் அவரை அடாபுடா போட்டுப் பேசிவிடக்கூடாது. அதை அவரது குடும்ப உறுப்பினர்கள் சிறிதும் விரும்புவதில்லை. சில பேர் அவனை என்ன சேதின்னு கேட்டுட்டு வர்றேன் என்று உடையவர்கள் வீட்டில் போய்க் கண்டபடி கத்துவார்கள். இவர்கள் என்ன கத்தினாலும் இவர்களை மடக்க ஒரே ஒரு வாக்கியம் போதும். அது "வெளியே போய்யா!" என்பது தான். இந்தச் சொல்லை மட்டும் ஒருவன் எந்தக் காலத்திலும் கேட்டுக்கொள்ள இடம் தந்துவிடக்கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# கலைத் தரிசனம்

1947.07.25 இல் பொலிகண்டி வல்வெட்டித்துறையில் பிறந்த கலாபூஷணம் இராசா திருமேனி அவர்களின் தந்தை யாரும் பாடுவதில் வல்லவர். திருமேனி அவர்கள் டி.எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோரின் பாடல்களைப் பாடுவார். இவரின் குரல்வளம் டி.எம்.எஸ்ஸின் குரல் வளத்தை ஒத்திருந்தது. கேள்வி ஞானம் மிக்கவர். ஆர்மோனியம் இசைக்கும் திறனும் உண்டு. ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, பஞ்சபுராணம் என்பன இவரின் குரலாகவே ஒலிக்கும்.

அருவரி முதல் பள்ளிக் காலம் முடியும் வரை கலைகளில் ஆர்வம் காட்டி வந்தார். சிறுபராயத்திலேயே திறமையாகப் பாடும் திறன் கொண்டவர். இவரை நாலு பேர் நடுவிலிருந்து பாடச் சொல்லிக் கேட்டால் பாடுவார். இவரின் பாடல் திறத்திற்கு பல்லி மிட்டாய் வாங்கிக் கொடுப்பார்கள். மரத்தில் ஏறி உச்சிக் கிளையில் இருந்து தன்னை மறந்து பாடுவார்.

தனது பள்ளிக் காலத்தில் இடம்பெற்ற இசைப் போட்டிகளிலும் சரி விளையாட்டுப் போட்டிகளிலும் சரி முதலிடமே பெறுவார்.

இவைகளுக்கு பரிசாக கல்லூரி பரிசளிப்பு விழாக்களில் புத்தகங்கள் கிடைக்கும். இவை மட்டுமல்லாமல் சிறு பராயத் திலிருந்தே அடுத்தவர் செய்வதை, பேசுவதை அப்படியே செய்தும் பேசியும் காட்டுவார். இதனைக் கண்ட இவரின் தாயார் நடிக்கிறதிலயும் நீ விண்ணன் தான் என ஆசீர்வாதம் கொடுத்தார்.

கலாபூஷணம் இராசா திருமேனி அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் வலம்புரிக்கு தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.





## கலாபூஷணம் இராசா திருமேனி
## அவர்களுடனான சந்திப்பு

**◆ நாடகத்துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

எனக்குப் படிப்பித்த புலோலியூர் இளவரசு வே.ஆழ்வாப்பிள்ளை B.A அவர்களின் எழுத்திலும் நெறியாள்கையிலும் உருவான கைதி காளிமுத்து எனும் துப்பறியும் நாடகம் நல்லூரில் மேடையேற்றப்பட்டது.

இதில் கதாநாயகன் இளங்கோவாக நடிக்க வேண்டுமென வற்புறுத்தியதனால் நடித்தேன். ''பெண்ணொன்று கண்டேன் பெண் அங்கு இல்லை'' என்ற பாடலுக்கு நான் நடித்த நடிப்பை எல்லோரும் மெச்சினார்கள்.

அதனால் சில காலம் இளங்கோவாகவே எல்லோர் மனதிலும் வாயிலும் வலம் வந்தேன். இதுவே நாடகத்துறைக்குள் நான் கால் பதித்த விதம்.

**◆ தாங்கள் நடித்த நாடகங்கள் பற்றி?**

எனது இசையோடு பாடும் திறன் கண்டு பாடசாலையில் கலா வினோதன் M.P அண்ணாச்சாமி ஆசிரியர் அவர்கள் தாமாகவே முன் வந்து எனக்கு ஆசானாக இருந்து நாடகங்கள் பற்றிய அறிவைத் தந்ததுடன் தனது நெறியாள் கையில் பக்த நந்தனார் இசை நாடகத்தை என்னையும்; எனது சகோதரன் திருப்புகழையும் நந்த னாகவும் ஐயராகவும் நடிக்க வைத்தார்.

இந் நாடகம் பல தடவை அரங்கம் கண்டது. இதன் தொடராக காத்தவராஜன், அரிச்சந்திரா, ஸ்ரீவள்ளி போன்ற இசை நாடகங்களில் நடித்தேன்.

அதேவேளை வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்க்கையின் வேதனை, தோல்வி, அமைதி எங்கே, எதைச் செய்வம், என்னதான் முடிவு போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களிலும் நடித்தேன்.

இவைகளில் அமைதி எங்கே நாடகம் தவிர்ந்த ஏனையவை என்னால் எழுதப்பட்டு நெறிப்படுத் தப்பட்டது. இன்னும் உழைப்பால் உயர்ந்தவன், இறுதி மூச்சு போன்றவை என்னால் நெறிப்படுத்தப் பட்டவையே.

**◆ தங்களுடைய அண்ணா கலைக்கழகம் உருவானது எப்படி?**

1990 இல் அண்ணா கலைக் கழகத்தை உருவாக்கினோம். அன்று முதல் இன்று வரை கழகத்தின் இயக்குநராக செயலாற்றிக் கொண்டிருக்கிறேன். இலைமறை காயாக இருக்கும் இளம் கலைஞர்களை இனம் கண்டு அவர்களை வழிப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுத்து வருகின்றோம்.

பொலிகண்டியில் எனது பிறந்த மண்ணில் பூமகள் நாடக மன்றத்தை நிறுவி அதன் மூலம் கலைஞர்களை உருவாக்கினோம். தற்போது அண்ணா கலைக்கழகம் ஒரு நாடகப் பயிற்சிப்பட்டறையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**◆ இதுவரை தங்களுக்கு கிடைத்த பாராட்டுக்கள், விருதுகள் பற்றிக் கூறுங்கள்?**

கலைத்துறை, விளையாட்டு, சமூக சேவை இம் மூன்று துறைகளிலும் என் செயற்பாடுகளின்நிமித்தம் பலதரப்பட்ட பாராட்டுக்களை பெற்றதுண்டு. அவைகளில் யாழ் இந்திய துணைத்தூதரகத்தினால் எனக்குக் கிடைத்த பாராட்டு எனக்கு பெருமகிழ்வைத் தந்தது.

**விருதுகள்**

கலைஞர் விருது-2015 சமரபாகு கலை இலக்கிய மன்றம்.

புதுவைக் கலைச்சுடர் விருது-2015 புதுக்குடியிருப்பு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவை


பல்கலைமாணி விருது 2016 பூமகள் கல்விச்சமூகம்

கலாபூஷணம் அரச விருது 2016

சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருது - 2010 கொற்றாவத்தை சிவானந்த விளையாட்டுக் கழகம் என்பன.

**◆ தங்களின் சிலம்பாட்டம் பற்றி? இதில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

சிலம்பாட்டம், கோலாட்டம், குத்துச்சண்டை போன்ற வித்தைகளை விரும்பியே நான் கற்றேன். சிலம்பாட்டம் அந்நாளில் கம்படி என்றே அழைக்கப்பட்டது. இதில் எனக்கு ஆர்வம் ஏற்படக்காரணமாக இருந்தவர் பொலிகண்டியைச் சேர்ந்த சூரசங்காரம் என்பவரே. அவர் இளமையில் மறைந்துவிட்டார்.



தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஞானபாக்கியமே எமது ஆசான். குத்துச் சண்டையை திரு. கார்த்திகேசு விளையாட்டு அதிகாரி அவர்களிடமே பயின்றேன்.

சூரசங்காரம் அவர்களின் மறைவும் என் எதிர்காலம் கருதி என் தாயாருக்கு வழங்கிய உறுதி மொழியுமே சிலம்பாட்டத்தைக் கைவிட நேர்ந்தது.

வாழ்நாளில் நான் அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் நேரிடையாகவும் மானசீகமாகவும் பல ஆசான்களைப் பெற்றுள்ளேன். அவர்களில் திருவாளர்கள் கலா வினோதன் M.P. அண்ணாசாமி. நடிகமணி ப.ப. வயிரமுத்து, சி.திரவியம்,B.A. பாலபண்டிதர், புலோலியூர் பரந்தாமன், வெஸ்லி கணபதிப்பிள்ளை ஆசிரியர், இரத்தினசிங்க விளையாட்டு ஆசிரியர், அண்ணாவிமார் தம்பு, கிருஷ்ணப்பிள்ளை, ஆர்மோனியம்- கலா பூஷணம் இராசரத்தினம் ஆகியோர் என் மனதில் நீக்கமற நிறைந்து நிற்பவர்கள்.

எனக்குக் கிடைத்த அனைத்து வெற்றிகளையும் என் ஆசான்களுக்குச் சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அதேவேளை இன்னொருவரையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இடப்பெயர்வுக்குப் பின்னர் வித்தாரமும் விசும்பும் வேண்டாம் மடை நெஞ்சே செத்தாரைப் போல திரி வித்தைக்குச் சந்துரு விசனம், என்கிற முதுமொழிகளுக்கேற்ப சில காலம் ஒதுங்கியிருந்த என்னைத் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் எனக்குப் புத்துணர்வு ஊட்டி கலாபூஷணம் எனும் கிரீடத்தை என் தலையில் அணியக் காரணமாக இருந்தவர் பண்டிதரும் பட்டிமன்ற நளினப் பேச்சாளரும் கலாசார உத்தியோகத்தருமான திரு. பிரதீபன் அவர்கள். இந்த இடத்தில் அவர்களுக்கு நான் தலைவணங்குகின்றேன்.

**◆ மனம் திறந்து கலை உலகத்திற்கு நீங்கள் கூறுவது?**

எமது பாரம்பரிய கலைகள் அனைத்தும் மீளவும் புத்துயிர் பெறவேண்டும். அவையனைத்தும் மறைந்து, மறந்து போகவும் விடக் கூடாது.

தடம்மாறிச் செல்லும் எமது இளந்தலைமுறைகளை நேர் வழியில், நல்வழியில் செல்ல சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தாங் கிய சமூக நாடகங்களை உருவாக்கி மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டும்.

இதற்குப் பாட சாலைகள் எம் மத்தியிலுள்ள கலா மன்றங்கள் அடித்தளமாக அமைய வேண்டும்.


இயல் இசை நாடகங்கள் அனைத்தும் இவை மூலம் போட்டி களாக அமைந்து செல்ல வேண் டும். இவைக்கு கலாசார திணைக் களமும் கைகொடுத்து உதவ வேண்டும்.

என்பணி தொடர்வேன். இதுவரை நீங்கள் எனக்கு வழங்கிய ஆதரவிற்கும் அன்பிற்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# யாழ்.பல்கலைக்கழகத்தில் வெசாக் தின நிகழ்வுகள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றைய தினம் வெசாக் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளை பல் கலைக் கழகத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிகழ்வுகளை யார் ஒழுங்குபடுத்துவது என்ற குழப்பம் நீங்கி நேற்றைய தினம் அமைதியான முறை யில் வெசாக் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக சூழலில் வெசாக் தினத் திற்காக வெளிச்சக் கூடு களைக் கட்ட முயன்ற புதுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் தாக்குதல் மேற் கொண்டமையினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை பல்க லைக்கழக சூழலில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.


வெசாக் தினத்தினை முன்னிட்டு பௌத்த மதம் சார்ந்த புதுமுக மாணவர் கள் வெளிச்சக் கூடுகளைத் தயார் செய்து அதற்கான மேலதிக அலங்காரத்தை யாழ்.பல்கலைக் கழக சூழ லில் மேற்கொள்ள முயன்ற னர்.

இவ்வாறு புதுமுக மாண வர்கள் குறித்த அலங்கா ரத்தை மேற்கொள்ள முயல் வதனையறிந்த சிரேஷ்ட மாணவர்களில் உள்ள சிங் கள மாணவர்கள் குறித்த அலங்காரத்தினை தாமே மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

இதனால் குறித்த விடயத் தில் சர்ச்சை ஏற்படவே இரு தரப்பும் இணைந்து குறித்த நிகழ்வினை மேற்கொள்ளு மாறு நிர்வாகத்தினால் அறி வுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற் றைய தினம் பல்கலைக்கழ கத்தைச் சூழ வெசாக்கூடு கள் அமைக்கப்பட்டு நிகழ் வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. இதன்போது மாணவர்க ளால் தாகசாந்தி நிகழ்வுக ளும் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தன. (இ-4)

# அரச மரக்கிளை முறிந்து விழுந்ததில் ஆட்டோவுக்கு சேதம்-சாரதி படுகாயம்





வீதியோரத்திலிருந்த அரச மரத்தின் கிளை திடீரென முறிந்து விழுந்ததில் ஆட்டோ பலத்த சேதத்திற்குள்ளானது.

அதேவேளை ஆட்டோச் சாரதி படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் யாழ். மானிப் பாய் வீதியில் ஆனைக்கோட் டைப் பகுதியிலுள்ள புளியங் கண்டு பிள்ளையார் ஆலயத் திற்கு முன்பாக இடம்பெற் றது.

இந்தச் சம்பவம் தொடர் பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர். (இ-17)

# நியூசிலாந்து பிரஜையிடம் மோசடி செய்த நபர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு பிரஜை ஒரு வரிடம் மோசடி செய்த இலங் கையர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த வெளிநாட்டு பிரஜை யிடம் மோசடியான முறையில் பணத்தைப் பெற்றுக் கொண்ட ஆட்டோ சாரதியொருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

நியூசிலாந்து பிரஜை ஒரு வரே இவ்வாறு ஏமாற்றப் பட்டுள்ளார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

நியூசிலாந்து பிரஜையுடன், 5 நாட்கள் பயணம் செய்து 90 ஆயிரம் ரூபா பணத்தை இந்த ஆட்டோச் சாரதி மோசடி செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆட்டோவில் பயணம் செய்தமைக்கான கட்டணம் 10 ஆயிரம் ரூபாய் என சாரதி தெரிவித்துள்ளார்.

எனினும், வெளிநாட்ட வர் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் எடுக்கச் சென்ற போது குறித்த சாரதி 90 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலி ஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, இந்த சம்ப வம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1069

Search for people, places and things    Nagendram  Home

**வேணு**




**மாதுரி**




**கிரிசாந்**




**மதுமிதா**




**காவேரி**

காதல் என்பது
"சாணிய மிதிச்ச"மாதிரி
கழுவினா போயிடும் ....

கல்யாணம் என்பது
"ஆணிய மிதிச்ச மாதிரி"
தழும்பு போகவே போகாது...

**பிருந்தா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒற்றுமையான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்

## பிரதமரின் வெசாக் வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

நல்லெண்ணத்துடன் உலகைக்காணும், கருணையுடன் வாழக்கூடிய ஒற்றுமையான சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார். வாழ்த்துச்செய்தியில்அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகவாழ் பௌத்த மக்களின் மிகவும் புனிதமான சமய முக்கியத்துவம் மிக்க தினமான வெசாக் நிகழ்வு, புண்ணிய கருமங்கள் உட்பட சமய வழிபாடுகளில் ஈடுபட்டு மிகவும் பக்தியுடன் கொண்டாடப்படும் தனிச் சிறப்பு மிக்க சமய நிகழ்வாகும்.

ஐக்கிய நாடுகளின் 14 ஆவது சர்வதேச வெசாக் தின நிகழ்வு மற்றும் உலக பௌத்த மாநாடு என்பவற்றை நடத்த கிடைத்தமை சிறந்த தொரு சந்தர்ப்பமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## கொடிகாமம் வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வழங்கல்



கொடிகாமம் பிரதேச வைத்திய சாலைக்கு புதிய அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி பசுபதிப்பிள்ளை அச்சுதனிடம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் கையளிக்கப்பட்டுள்ளது. மத்திய சுகாதார அமைச்சின் நிதி மூலம் பெற்றுக் கொள்ளப் பட்ட சுமார் 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. (இ-89)

## வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்கில் பொலிஸார் விழிப்புணர்வு

வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்னெடுத்துள்ளது. முதற்கட்டமாக வீதி விபத்தை எவ்வாறு தவிர்த்தல் என்பது தொடர்பிலான அறிவித்தல் பனர்களை யாழில் உள்ள பிரதான வீதிகளில் காட்சிப்படுத்தியுள்ளது. இந்த நிகழ்வின் ஆரம்ப வைபவம் நேற்றைய தினம் யாழ். பிரதான வீதியில் நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்தின கலந்து கொண்டிருந்தார். இதில் பிரதான வீதிக்கு உட்செலுத்துவதற்கு முன்னர் நிறுத்தவும், சமிக்ஞை விளக்கை அவதானிக்கவும், பச்சை நிற விளக்கு ஒளிரும்போது வீதியின் இருபக்கங்களையும் நன்கு அவதானித்து பிரதான வீதிக்கு செல்லவும், எப்போதும் வீதியின் இடதுபக்கமாக வாகனம் மோட்டார் வாகனங்களை செலுத்தவும்.

உங்கள் உயிர் எங்களுக்கு மிகவும் பெறுமதி மிக்கது, தயவு செய்து அவதானமாக வாகனத்தை செலுத்தவும் என வீதி விபத்தை தடுக்கும் வகையிலான வீதி ஒழுங்கு முறைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இது போன்ற விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை கொண்ட பனர்களை யாழ்ப்பாணம்-கண்டி வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற பிரதான வீதிகளில் காட்சிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்தின தெரிவித்தார். (இ-4)



## ஆளுநர் அலுவலகத்தால் மரவள்ளிக் கிழங்கு தானம்



வெசாக் தினத்தினை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் ஆளுநர் செயலக உத்தியோகத்தர்களினால், மரவள்ளிக் கிழங்கு தானம் நேற்றைய தினம் ஆளுநர் செயலகம் முன்பாக இடம்பெற்றது. (இ-9)

## யாழ். சிறையிலிருந்து நேற்று நான்கு கைதிகள் விடுதலை



வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 4 கைதிகள் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் புரிந்து தண்டப் பணம் செலுத்த முடியாமல் சிறையில் இருந்த 4 கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

## மகிந்தவின் பாதுகாப்பில் அரசின் தலையீடு இல்லை

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமைக்கும் அரசாங்கத்துக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை" என்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமர வீர தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பைத் தீர்மானிப்பது, பாதுகாப்புத் துறையைச் சார்ந்தவர்களே தவிர, அரசாங்கம் இதில் எந்தவொரு தலையீட்டையும் செலுத்தாது" என்றும் இதன்போது அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக்காரியாலயகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவருக்கு எந்த அளவுக்கு பாதுகாப்பு தேவையோ அந்த அளவுக்கான பாதுகாப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது. அவருடைய பாதுகாப்பைக் குறைப்பது அல்லது அதிகரிப்பது குறித்து, பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினரே தீர்மானிப்பர். இதில், அரசாங்கத்தின் தலையீடு என்று எதுவும் கிடையாது.

"மேலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாது என்றால், பாதுகாப்புத்துறைக்குக் கோரிக்கை விடுத்து, தனக்கு எந்த அளவுக்கு பாதுகாப்புத் தேவை என்பதை பெற்றுக் கொள்ள முடியும்.

"இது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கென்று எடுக்கப்பட்ட தீர்மானமல்ல. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள



பாதுகாப்பைக் குறைக்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறையினர் தீர்மானித்தால், அந்தப் பாதுகாப்பும் குறைக்கப்படும்" என்று, இதன்போது அவர் மேலும் கூறினார்.

மே தினத்தன்று, காலி முகத்திடலில் குழுமிய கூட்டத்தைக் கண்டு பயந்தே, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று, சில எம்.பிக்கள் கூறுகின்றனர் என்று, ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோது, "கூட்டத்தைக் கண்டு பயந்து இந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது. இதற்காக வருந்த வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது" என்றும் அவர் பதிலளித்தார். (இ-7)








யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வு நேற்றைய தினம் யாழ் மாவட்டச்செயலகத்தில் அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். மாவட்ட செயலக முன்றலில் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு மக்களுக்கு பானங்கள் வழங்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12,13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் வெசாக்தின சர்வதேச பௌத்த மாநாட்டுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கும் முகமாக பதாகைகளும் வெளிச்சக்கூடுகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (படங்கள் - பொ. சோபிகா)

# தீவுகளின் சிறு கைத்தொழில்/ தொழில்நுட்ப மையமாக புளியங்கூடல் சிறு நகர்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

புளியங்கூடல் கிராமம் வேலணைத் தீவின் மையத்தில் அமைந்திருப்பதுடன், தீவுகள் வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் முக்கியமானதொரு குடியிருப்பாகும். புளியங்கூடல் கிராமத்தில், புளியங்கூடல் சந்தியை சிறியதொரு கைத்தொழில்/ தொழில்நுட்ப மையமாக, சிறுநகராக (Township) உருவாக்க வேண்டிய தேவை இன்று உண்டு. இந்நகர் உருவாக்கம் குறித்து பல நிர்வாக மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வரும் பின்புலத்தில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

1991 இல் ஏற்பட்ட பாரிய கட்டாய இடப்பெயர்வுக்கு முன்னர், தீவுப் பகுதியில் புளியங்கூடல் கிராமமும், புளியங்கூடல் சந்தியும் விவசாயத்திலும் இயந்திர சேவைகள் வழங்குவதிலும் இயந்திரங்கள் பழுதுபார்ப்பதிலும் மற்றும் பல்வகையான தொழில்நுட்ப சேவைகள் வழங்குவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தன. இக்கிராமம் நீண்டகாலமாக சரவணை விதானை பிரிவுக்குள்ளும் இருந்து வந்தது. தற்பொழுது புளியங்கூடல் தனிக் கிராம அதிகாரி பிரிவாக இருக்கின்றது. 1971 இல் சுருவில் கிராம சேவகர் பிரிவுக்குள் இருந்த புளியங்கூடலில் 1913 பேர் இருந்துள்ளனர். 1981 இல் இக்கிராமத்தின் மக்கள் தொகை அண்ண்ளவாக 2200 பேராகவும் 1991 இல் 2500 பேராகவும் இருந்தது.

புளியங்கூடல் மக்கள் மிகவும் கடின உழைப்பாளிகளாகவும் விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் தொழில்நுட்ப அறிவை தேடுவதிலும் மிகுந்த ஈடுபாடும் ஆற்றலுள்ளவர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

தீவுப் பகுதியில் இக் கிராமமே புதிய இயந்திரங்கள், தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தலில் முன்னோடியாக இருந்தது. பெற்ரோமாக்ஸ், ஒலி பெருக்கி, மின் பிறப்பாக்கி, நீர் இறைக்கும் இயந்திரங்கள் (Alcon Water pump), உழவு இயந்திரங்கள் (Mersy Ferguson) அறிமுகம் செய்தலில் முன்னோடியாகத் திகழ்ந்தது. தீவக பஸ் கம்பனி நடத்தினதிலும் இக் கிராமத்தவர்களுக்கு முக்கிய பங்குண்டு. திருவாளர்கள் துரையப்பா மற்றும் கந்தசாமி அவர்களும் தீவு பஸ் கம்பனி நடத்துவதில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் உற்பத்தி, விற்பனையில் புளியங்கூடல் தொழில் அதிபர்கள் அன்றும் இன் றும் முக்கியத்துவம் பெற்றுள்ளனர்.

1991 இற்கு முன்னர் பல்வேறு கைத்தொழில் சேவைகள் வழங்குவதில் புளியங்கூடல் சந்தி முக்கியத்துவம் பெற்று இருந்தது.

1950 களின் பிற்பகுதியில் குறிப்பாக 1960 களில் விவசாயத்துறையில் மாட்டு வண்டி, கை உழவு, துலா இறைப்புக்குப் பதிலாக உழவு இயந்திரமும் நீர் இறைக்கும் இயந்திரமும் பாவனைக்கு வந்தன. இவ்விரண்டு தொழில்நுட்பங்களையும் மிக வேகமாக புளியங்கூடல் விவசாயிகளும் தொழில் முயற்சியாளர்களும் முன்னெடுத்தார்கள். இவர்களது முயற்சியின் காரணமாக வேலணை மக்கள் குறிப்பாக வேலணை மேற்குக் கிராமம் பெரும் நன்மைகள் பெற்றது.

வேலணை மேற்குக் கிராமம் 1950 களுக்கு முன் தாழ்ந்த நெற்காணிகளைக் கொண்ட பிரதேசமாக இருந்ததுடன் வருடத்தில் ஒக்டோபர் மாதத்திலிருந்து பெப்ரவரி மாதம் வரை நெல் வயல்களில் நீர்தேங்கி இருப்பதுடன் வாழிடப் பரப்புகளும் சதுப்புத்தன்மை கொண்ட தாகவும் இருந்தன. 1960 களிலும் 1970களிலும் வேலணை மேற்கு நெற் செய்கைப் பெருமளவு பரப்புகள் கொட்டு மண் இட்டு மேட்டு தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டன. புளியங்கூடல் உழவு இயந்திரங்களும் இக்கிராமத்து பயிற்றப்பட்ட திறமை மிக்க உழவு இயந்திர சாரதிகளுமே இவ் வேலையை திறம்பட நிறைவேற்றினார்கள். இதுபோல வேலணை கிழக்கிலும் பெரு மளவு நெற் செய்கை வயல்கள் தோட்டக் காணிகளாக மாற்றப்பட்டதில் புளியங்கூடல் தொழிற்படை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

1970 களுக்கு முன்னர் தீவுப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. பின்னர் படிப்படியாக மின்சார விநியோகம் விரிவடையத் தொடங்கியது. எனினும் கோயில் திருவிழாக்கள், கலாசார விழாக்கள் மற்றும் திருமண நிகழ்வுகள்-கூடுதலான மின்சாரப் பாவனைக்குத் தனியார் மின்பிறப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன.

தீவுப்பகுதியில் இருந்த மின் பிறப்பாக்கிகள் புளியங்கூடலிலேயே இருந்தன. இதில் திருவாளர்கள் வேலுப்பிள்ளையும் தம்பிராசாவும் முன்னிலை வகித்தனர். மேலும் ஒலிபெருக்கி வாடகை விடும் முயற்சியாளர்களும் இக் கிராமத்திலேயே அதிகமாகக் காணப்பட்டனர். மின்பிறப்பாக்கி வைத்திருந்தவர்களிடம் பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரமும் ஒலி பெருக்கியும் இருந்தன.

அக் காலத்தில் கோயில் திருவிழாக்களிலும் ஒலி பெருக்கி பாவனை மிகவும் பிரபல்யமாக இருந்ததுடன் இச் செயற்பாடுகளில் புளியங்கூடல் சேவை வழங்குவோர் முக்கியத்துவம் பெற்று இருந்ததுடன் இவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளையும் காண முடிந்தது.

புளியங்கூடல் தொழில் முயற்சியாளர்கள் வரிசையில் ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இதில் றியோ ஐஸ்கிறீம் (Rio Ice Cream), லிங்கம் ஐஸ்கிறீம் (Lingam Ice Cream) அன்றிலிருந்து இன்றுவரை நாடளாவிய ரீதியில் புகழ்பெற்றிருக்கின்றன. மேலும் யாழ்ப்பாணம் வரும் சுற்றுலா பயணிகள் தவறாது விஜயம் செய்யும் இடங்களாக உள்ளன.

இந் நிறுவனங்களை முன்னெடுத்த திரு. இரத்தினமும் அவர் மகன் பாஸ்கரனும் திருவாளர் அப்புலிங்கம் ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர்.

அன்றும் இன்றும் ஐஸ்கிறீம் வியாபாரத்திலும், கோயில் திருவிழாக்கால நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரத்திலும் புளியங்கூடல் பின்னணி ஐஸ்கி றீம் உற்பத்தியாளர்களே முக் கிய பங்கை வகிக்கின்றனர்.

மேலும் புளியங்கூடல் சந்தியிலேயே தீவுப் பகுதியில் முதன் முதலாக அரைக்கும் ஆலை நிறுவப்பட்டது. இது போல பல்வேறு இயந்திர சேவைகளும், தொழில்நுட்ப சேவைகளும், புளியங்கூடல் சந்தியில் வளரலாயின. மேலும் இக்கிராமத்திலிருந்து தென்னிலங்கை நகர்களுக்கு லொறி சேவைகளும் பயணிகள் சேவைகளும் இடம் பெற்றன. இதில் என்.ஆர். போக்குவரத்துச் சேவை, வி.ரி. எஸ்.போக்குவரத்துச் சேவை, சேகர் சகோதரர்கள் போக்குவரத்துச் சேவை முக்கியத்துவம் பெற்றிருந்தன.

1990களில் புளியங்கூடல் சந்தி ஒரு சிறு நகரமாக இருந்ததுடன், தொழில்நுட்ப புதுமைகள் ஆரம்பமாகவும், பரவும் இடமாகவும் இருந்தது. (Centre of Innovation and Diffusion)

மேலும் அன்று இக் கிராமத்தில் மாதர்சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம், வாலிபர் சங்கங்கள் மிகவும் சிறப்பாக முன்மாதிரியாக செயற்பட்டன.இச் சங்கங்கள் கிராமத்தின் சமூக - பொருளாதார மேம்பாட்டில் காத்திரமான பங்களிப்பை வழங்கின. மாதர் சங்கத்தால் கைத்தறி நெசவாலை இயக்கப்பட்டதுடன் ஆடைகள் தைக்கும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு இடம் பெயர்வுடன் இக் கிராமத்தினதும், சிறு நக ரத்தினதும், பொருளாதார மும், உட்கட்டமைப்புக்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இங்கிருந்து இடம் பெயர்ந்த இக் கிராம மக்கள் இடம் பெயர்ந்த சூழ்நிலையிலும் தங்கள் கடின உழைப்பால் ஓரளவு சிறப்பாக தங்கள் வாழ்க்கையை முன்னெடுத்து மகிழ்ச்சியை தருகின்றது.

1996 இல் கிராம மக்களின் ஒரு பகுதியினர் மீளக் குடியமர்ந்து தங்களது வாழ்வாதாரங்களை ஓரளவு மேம்படுத்தியுள்ளனர். தீவுப் பகுதியில் இடப் பெயர்வுக்குட்பட்ட கிராமங்களில் இடம்பெற்ற மீள் குடியேற்றங்களை ஒப்பிட்டு நோக்கின் புளியங்கூடல் மீள் குடியேற்றத்தில் புனர் வாழ்வில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.


(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## தங்கத் தூண்டில்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.
அவர்களிடம் அவன்,
“சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன.
ஏதேனும் உணவு தாருங்கள்!” என்று கெஞ்சினான்.
இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.
இதைப் பார்த்த சுந்தர்,
“அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது!” என்று எரிச்சலுடன் சொன்னான்.
அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான்.
அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.
“சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!” என்று கத்தினான் சுந்தர்.
மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.
“இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!” என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.
பல ஆண்டுகள் சென்றன.
செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது.
வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர்.
“என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்!” என்றார்.
தன் வீட்டிற்கு வந்த பிச்சைக் காரன்தான் அவன் என்பது வசந்த்துக்கு தெரிந்தது.
கோபத்தால் துடித்த அவன்,
“நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்து காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா!”என்று கத்தினான்.
ஆனால், அவரோ,
“இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!” என்று உறுதியாகச் சொன்னார்.
இதை வசந்த் ஏற்றுக் கொள்ள வில்லை. வழக்கை நீதிமன்றத் திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.
வசந்த்தைப் பார்த்து அவர்,
“நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கை யில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.
உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார்.
அதைப் பயன் படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார்.
நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே.
இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது.
இதுவே என் தீர்ப்பு!” என்றார்.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கொலம்பஸ் தனது கடைசி கடற் பயணத்தை மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆரம்பித்தார்.
- 1812 - லண்டனில் நாடாளுமன்றத்தில் வைத்து பிரதமர் ஸ்பென்சர் பேர்சிவல் ஜோன் பெல்லிங்ஹம் என்பவனால் கொல்லப்பட்டார்.
- 1857 - இந்தியக் கிளர்ச்சி, 1857: இந்தியப் புரட்சியாளர்கள் டில்லியை பிரித்தானியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1867 - லக்சம்பேர்க் விடுதலை அடைந்தது.
- 1891 - ஜப்பானில் பயணம் மேற்கொண்டிருந்த ரஷ்ய மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.
- 1905 - அல்பேர்ட் ஜன்ஸ்டீன் பிரௌனியன் இயக்கம் பற்றிய தனது விளக்கத்தை வெளியிட்டார்.
- 1924 - மெர்சிடிஸ்-பென்ஸ் நிறுவனம் காட்லீப் டைம்லர், கார்ல் பென்ஸ் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் அலூசியன் தீவுகளின் அட்டு தீவைக் கைப்பற்றினர்.
- 1949 - சியாம் நாடு தாய்லாந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1949 - ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேல் இணைந்தது.
- 1953 - டெக்சாசில் இடம்பெற்ற சூறாவளியில் 114 பேர் உயிரிழந்தனர்.
- 1960 - முதலாவது கருத்தடை மாத்திரை அறிமுகமானது.
- 1985 - இங்கிலாந்தில் உதைபந்தாட்ட போட்டியொன்றில் அரங்கில் இடம்பெற்ற தீயினால் 56 பார்வையாளர்கள் கொல்லப் பட்டனர்.
- 1987 - முதலாவது இதய மாற்றுச் சத்திர சிகிச்சை மேரிலாந்தில் நடத்தப்பட்டது.
- 1997 - ஐபிஎம் இன் ஆழ் நீலக் கணனி முதன் முதலாக காரி காஸ்பரவை சதுரங்க ஆட்டத்தில் தோற்கடித்தது.
- 1998 - இந்தியா பொக்ரானில் மூன்று அணுச் சோதனைகளை நடத்தியது.

### பிறப்புக்கள்

- 1895 - ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இந்தியத் தத்துவஞானி (இ. 1986)
- 1897 - சுத்தானந்த பாரதியார் கவியோகி (இ. 1990)
- 1897 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (இ. 1985)

### இறப்புகள்

- 1976 - அல்வார் ஆல்ட்டோ, பின்லாந்து கட்டடக்கலைஞர் (பி. 1898)

### சிறப்பு நாள்

- தேசிய தொழில் நுட்ப தினம் - இந்தியா

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 150 | 150 | 200 | 100 |
| தக்காளி | 140 | 120 | 140 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 100 | 80 | 80 | 50 |
| கோவா | 180 | 200 | 140 | 150 | 200 | 120 |
| கரட் | 230 | 250 | 200 | 200 | 280 | 140 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 120 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 240 | 240 | 300 | 180 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 140 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 180 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | — | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 180 | 140 | 150 | 200 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 160 | 140 | 120 | — | 160 | 140 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 150 | 200 | 140 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 100 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 80 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 50 | 50 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 50 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 80 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | — | 200 | 130 |
| வெங்காயப்பூ | 200 | — | — | 150 | 200 | — |
| முள்ளங்கி | 70 | — | 70 | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | — | — | — |

தலையிருக்க வால் ஆடலாமோ?

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஆசிரியர் சொன்ன கதை

ஆசிரியர் ஒருவர் அவசர அவசரமாக வகுப்பறைக்கு வந்தார். கையில் பத்திரிகை. ஆசிரியரின் முகத்தில் கோபமும் தாபமும் தெரிந்தது.

ஆசிரியர் கோபத்தோடு இருப்பதை உணர்ந்த மாணவர்கள் பௌவியமாக இருந்தனர்.

ஒரு மாணவன் மட்டும் எழுந்து சேர் ஒரு கதை சொல்லுங்கள் என்றான்.

கதை சொல்லத்தான் போகிறன். அந்தக் கதை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கானது. உங்கள் மூலமாக இந்தக் கதை அவர்களுக்குப் போய்ச் சேரட்டும் என்றார் ஆசிரியர்.

கதையை யாருக்குச் சொன்னால் என்ன? கதை கதைதானே! கதையைச் சொல்லுங்கள் சேர் என்று ஒன்றாகக் குரல் கொடுத்தனர் மாணவர்கள்.

ஒரு காட்டில் நான்கு மாடுகள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அந்த மாடுகளைக் கொன்று அவற்றின் இறைச்சியைச் சுவைக்க வேண்டும் என்று அந்தக் காட்டில் வாழும் சிங்கத்துக்கு நெடுநாள் ஆசை.

மாடுகளைக் கொல்வதற்கு சிங்கம் கடுமையாக எத்தனிக்கும். அந்த மாடுகள் ஒன்றாக – ஒற்றுமையாக சிங்கத்தை எதிர்த்துத் துரத்தும்.

மாடுகளைக் கொன்று இறைச்சி சாப்பிட முடியாத சோகத்தில் இருந்த சிங்கம் ஒரு நாள் நரியைச் சந்தித்து தன் கவலையைக் கூறியது.

சிங்கராஜாவே! மாடுகள் ஒற்றுமையாக இருக்கும் வரை அவற்றை கொன்று சாப்பிடுவது உங்களால் முடியாத காரியம்.

மாடுகளைக் கொல்வதற்குரிய உபாயத்தை நான் வகுக்கிறேன். நீங்கள் கவலை கொள்ள வேண்டாம் என்று ஆறுதல் கூறியது நரி.

ஒரு நாள் நரியார் மாடுகளைச் சந்தித்தார். அன்பு நண்பர்களே! நீங்கள் அனைவரும் ஒன்றாக நின்று புல் மேய்ந்தால் எப்படிப் புல் கிடைக்கும்?

ஆளுக்கொரு திக்காக செல்லுங்கள். நிறையப் புல் கிடைக்கும். கூட்டமாகச் சென்று விடாதீர்கள் என்று ஆலோசனை கூறியது நரி.

நரியின் அவதந்திரத்தை அறியாத மாடுகள் தங்களின் ஒற்றுமையை விட்டு ஆளுக்கொரு திசையாகச் சென்றன.

அவ்வளவுதான் சிங்கம் எல்லா மாடுகளையும் ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொன்று தின்றது.

இந்தக் கதையை வடக்கு மாகாண சபையின் அத்தனை உறுப்பினர்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

வேலையற்ற பட்டதாரிகள் வடக்கு மாகாண முதலமைச்சரை சபைக்குச் செல்ல விடாமல் தடுத்து மறியல் போராட்டம் நடத்துகின்றனர்.

முதலமைச்சர் சபைக்குள் வர முடியாமல் இருக்கிறார் என்றவுடன் அனைத்து உறுப்பினர்களும் சபையின் வெளிவாசலுக்கு வந்து வேலையற்ற பட்டதாரிகளுடன் சுமுகமாகக் கதைத்து முதலமைச்சரைத் தடுத்து நிறுத்துவது நல்லதல்ல என்று புத்திமதி கூறி அவரை சபைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதைச் செய்யாமல் சபையின் அமர்வு நடத்தப்படுகிறது. முதலமைச்சர் தன் வாசஸ்தலம் திரும்பி விடுகிறார்.

சபை அமர்வு முடிந்த பின்பு அவைத் தலைவர், அமைச்சர்கள், சபை உறுப்பினர்கள் வெளியில் செல்ல முடியாதவாறு வேலையற்ற பட்டதாரிகள் நுழைவாசல்களை பூட்டி விடுகின்றனர்.

இப்போது என்ன செய்வது? சில உறுப்பினர்கள் சொன்னார்களாம் முதலமைச்சரைக் கூப்பிடுங்கள் என்று. இந்தப் புத்திமதி முதலில் வந்திருந்தால் முதலமைச்சரை சபைக்குக் கூட்டிச் சென்றிருக்க வேண்டும்.

முதலமைச்சரைச் கூட்டிச் செல்ல வராத உறுப்பினர்களை வெளியே கூட்டிச் செல்வதற்கு முதலமைச்சரும் வர மாட்டார் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியாவிட்டாலும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிச்சயம் தெரியும்.

ஆம், மக்கள் இனிமேலாவது தலைவனை கைவிட்டு சபையை நடத்த முற்படாதீர்கள். உங்களுக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் உங்களுக்குப் பிரச்சினை என்றவுடன் நீங்கள் ஒன்றுபடுவதுதானே பொது நியாயம்.

# பட்டாசு கிடங்கில் திடீர் வெடிவிபத்து

## 14 பேர் உயிரிழப்பு

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவிலுள்ள பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில், அங்கு வேலை செய்து கொண்டிருந்த 14 பேர் பலியாகி உள்ளனர்.

மெக்சிக்கோ நாட்டின் மத்திய பியூப்லா மாநிலம், சான் இசிட்ரோ கிராமத்தில் திருவிழாவிற்காக ஏராளமான பட்டாசுகள் மற்றும் வாண வேடிக்கைக்கான வெடிபொருட்களை ஒரு குடோனில் வைத்திருந்தனர். விழா ஏற்பாடுகளை பொது மக்கள் தீவிரமாக மேற்கொண்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு திடீரென பட்டாசுகள் வைத்திருந்த குடோனில் தீ விபத்து ஏற்பட்டது. பட்டாசுகள் மற்றும் வெடிபொருட்கள் வெடித்து நாலாபுறமும் சிதறி பொது மக்கள் மீது விழுந்தது.

தகவல் அறிந்த தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று தீயை கட்டுப்படுத்தி மீட்பு பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (இ-3)

# ஆட்டோவில் 8 கிலோ கஞ்சா

(கொழும்பு)

எட்டு கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை ஆட்டோவில் எடுத்துச் சென்ற ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

தீர்க்கப்படாத குற்றச் செயல்கள் பிரிவின் பொலிஸாரே இவ்வாறு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

மிரிஹானை பிரதேசத்தை சேர்ந்த இந்த நபர் 2013 ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும், ஆட்டோவின் ஒலிபெருக்கிகளுக்குள் இந்த கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**கூட்டுக் குடும்பத்தால் பலன்கள் என்ன?**

தனிமனித உறவு களை வளர்ப்பதற்கும் குடும்ப உறவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் உறவைப் பலப்படுத்திக் கொள்ளவும் பல்வேறு விடயங்கள் குறித்து விவாதம் நடத்துவதற்கும் கர்மங்கள், நல்ல காரியங்கள் செய்வதற்கும் குடும்பத்திலும் சமூகத்திலும் உள்ள பல நல்ல விடயங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை உதவியது.




குடும்பத்தில் வாழ வேண்டிய முறை, மூத்தவர்களோடு எவ்வாறு பழக வேண்டும், குருமார்களை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பன பற்றியெல்லாம் இளைய தலைமுறை கற்றுக் கொள்வதற்கு கூட்டுக் குடும்ப முறை உதவிகரமாக இருந்தது.

தாம்பத்ய வாழ்வில் ஏற்படும். குறைபாடுகளில் பெரியவர்கள் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை உதவியது. நன்மை– தீமைகளை கண்டறிந்து தேவையானவற்றைஏற்றுக்கொண்டு வேண்டாதவற்றைக் களைந்து விடுவதற்கும் முடிந்தது. ஆசார முறைகளையும் வாழக்கை நடைமுறைகளையும் குடும்பத்தில் இருந்தே கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

ஒற்றுமையாக இருப்பதற்கான பயிற்சியும் அதன் அவசியமும் கற்றுத் தரப்பட்டது. பக்கத்து வீட்டுக்காரர்களிடமும் அன்று ஒற்றுமை பாராட்டி வாழ்ந்திருந்தார்கள். கிணறு வெட்டுவது, குளத்தைச் சுத்தம் செய்வது, வீடுகட்டுவது, விவசாயம் செய்வது ஆகிய வேலைகளைக் கூட்டாகச் செய்து வாழ்ந்தார்கள்.

(தொடரும்)

**விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!**

நீர் வெறுப்பு/ ரேபிஸ் நோயினால் பாதிக்கப்படுவோரில் 50 வீதத்திற்கு அதிகமானோர் சிறுவர்கள். தண்டனைக்கு பயந்தோ ஊசி போடப் பயந்தோ பெற்றோருக்குத் தெரிவிக்கமாட்டார்கள். விளைவு விபரீதமாக அமைந்து விடுகிறது. பெற்றோர்கள் இதுவிடத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

**வருமுன் காப்போம்! மரணம் தவிர்ப்போம்!**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகரசபை.

# வெளிநாடு; முகவரிடம் ஏமாந்த நால்வர் பொலிஸில் முறைப்பாடு

வெளிநாட்டிற்கு செல்லும் நோக்கில் முகவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த நான்கு பேர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேர் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த முகவர் ஒருவரிடம் வெளிநாடு செல்வதற்காக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கியுள்ளனர்.

அவ்வாறு பணம் பெற்றுக் கொண்ட முகவர் தங்களை வெளிநாடு அனுப்பாத காரணத்தினால் பாதிக்கப்பட்ட நால்வரும் இது தொடர்பில் நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள் ளனர்.


இம்முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள நெல்லியடிப் பொலிஸார் நாளை வெள்ளிக்கிழமை இரு பகுதியினரினையும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (இ-60)

# மோதலில் ஈடுபட்டவர் விளக்கமறியலில்

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த மாதம் துன்னாலை வேம்படிப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அதே பகுதியை சேர்ந்த நபரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)




## திருப்பதி மலைவாழும் வெங்கடேசா

அந்தச் சுந்தரன் துயில் எழ வென்று சுப்ரபாதப் பண் பாடப்படுகிறது.

மங்கமண மஞ்சன விழா எடுக்கப்படுகிறது. தோளில் இருந்து நிலம் வரைதோமாலை என்னும் தொடுத்த மாலை சூட்டப்படுகிறது.

வைர, வைடூரியங்களால் அலங்கரிக்கப்படுகிறான். தலைமுதல் பாத நகம் வரை தங்கத்தால் இழைக்கப்படுகிறான். மனையாளை அடைந்த பின்பே மாண்படைந்தான் என்பதை நினைவுபடுத்தும் வகையில் தினம் தினம் அவனுக்குத் திருமணக் கோலம்.

ஊஞ்சலில் அமர்த்தி வைக்கப்பட்டு ஒய்யாரமாக ஊஞ்சலாட்டப்படுகிறான். பிரம்மனே வந்து முன்னின்று பிராட்டியுடன் கூடிய அவனை ஊர்வலமாகக் கூட்டிச் சென்று உற்சவம் கொண்டாடுகிறான்.

கஜேந்திர மோட்சத்தைக் கருத்திற்கொண்டு களிறுகள் அவன் சேவையில் காலத்தைக் கழிக்கின்றன. (தொடரும்)

# சத்திய தரிசனம்



## பணம் மட்டுமே வாழ்வல்ல

❖ பகுத்தறிவு இல்லாததால், மிருகங்கள் தாங்கள் உயிர் வாழ்வதையே உணராமல் வாழ்கின்றன. ஆனால், பகுத்தறிவு இருந்தும், வாழ்க்கை இன்னதென்று அறியாமல் வாழும் மனிதர்கள் மிருகத்தையும் விட தாழ்ந்தவர்கள் ஆவார்கள். அடுத்தவர்களைக் குறை சொல்லும் முன் நம் குறைகளைச் சிந்தித்துப் பாருங்கள். நம்மை தூய்மையாக வைத்துக் கொள்ளாமல் மற்றவர்களை மட்டும் குறை சொல்வதில் நியாயம் இல்லை.

❖ மனிதனுக்கு மனதில் காமம்(ஆசை), குரோதம் (வெறுப்பு), லோபம் (கஞ்சத்தனம்), மோகம்(இச்சை), மதம்(தான் என்னும் செருக்கு), மாச்சர்யம்(சகிப்பின்மை) என்னும் ஆறுபகைவர்கள் உள்ளனர். இவர்களில் யார் ஒருவர் உள்ளே நுழைந்தாலும் மனம் பாழ்படுகிறது. செலவழிக்கும் பணம் மட்டும் நம்மை விட்டுச் செல்வதில்லை. நாம் பூமியில் வாழும் நாட்களும் நம்மை கேட்காமலேயே சென்று கொண்டே இருக்கிறது. ஆனால், செல்வம் ஈட்டுவதில் நாம் காட்டும் அக்கறையை, வாழ்நாளைச் செலவழிப்பதில் காட்டுவதில்லை.

❖ தொண்டு செய்வதில் இருக்கும் ஆனந்தத்துக்கு ஈடு இணை எதுவுமில்லை. ஆனால், சேவை செய்வது கடினம் என்றே நாம் நினைக்கிறோம். சேவைமனப்பான்மை கொண்டவர்கள் செயல்களைக் கண்டு மலைப்பதில்லை.,

# மீண்டும் அணியில் இடம் கிடைக்கும் நம்பிக்கையுடன் இருக்கிறார் ரெய்னா

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக திகழ்ந்தவர் சுரேஷ் ரெய்னா. இவர் கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குப்பின் அணியில் இடம் பிடிக்கவில்லை.




தற்போது ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகிறார். மதிப்பிற்குரிய சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இடம் கிடைக்கவில்லை. இது தனக்கு ஏமாற்றம் அளிக்கிறது என்று ரெய்னா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரெய்னா கூறுகையில், இப்போது என்னால் என்ன சொல்ல முடியும்? இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. அத்துடன் வலியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நேரத்தில் நான் மீண்டும் அணியில் தேர்வு செய்யப்படுவேன் என்று எதிர்பார்த்தேன். தொடர்ச்சியாக நான் நன்றாக துடுப்பாட்டம் செய்து வந்துள்ளேன். ஐ.பி.எல். தொடரில்எனது திறமையை நிரூபித்துள்ளேன்.

உறுதியாக நான் எதிர்பார்த்தது போல் அமையவில்லை. ஆனால், ஒருநாள் மீண்டும் இந்திய அணிக்கு திரும்பும் வகையில் என்னுடைய துடுப்பாட்டம் பேசவைக்கும் என்றார்.

# ராகுல் இல்லாததே தோல்விக்குக் காரணம் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் தெரிவிப்பு



ஐ.பி.எல். தொடரில் இதுவரை இல்லாத அளவிற்கு ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி படுதோல்வியை சந்தித்துள்ளது. 13 போட்டிகளில் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அந்த அணியின் முதுகெலும்பாக கருதப்படும்விராட் ஹோலி, டி வில்லியர்ஸ் மற்றும் கிறிஸ் கெய்ல் ஆகியோர் சிறப்பாக விளையாடவில்லை.

இதற்கிடையே லோகேஷ் ராகுல், சர்பராஸ் கான் ஆகியோர் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகினார்கள். கடந்த வருடம் லோகேஷ் ராகுல் விக்கெட் கீப்பர் பணியுடன் துடுப்பாட்டத்திலும் சிறந்து விளங்கினார். அவர் இல்லாததே ஆர்.சி.பி.யின் படுதோல்விக்கு முக்கிய காரணம் என்று ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து ரிக்கி பொண்டிங் மேலும் கூறுகையில் ஆர்.சி.பி. அணிக்கு லோகேஷ் ராகுல் இல்லாதது பெரிய இழப்பு. கடந்த சீசனில் (2016) மூன்று பேருக்கும் அடுத்த வீரராக பலம்வாய்ந்த நிலையில் இருந்தார்.

சில அபாரமான விடயங்களை கடந்த வருடம் செய்தார். விராட் ஹோலியும், அவரும் தொடக்க வீரர்களாக சிறப்பாக செயற்பட்டனர். டொப் ஓடரில் சிறப்பாக விளையாடி வந்த லோகேஷ் ராகுல், துரதிர்ஷ்டவசமாக அணியில் இடம் பிடிக்க முடியாமல் போய்விட்டது என்றார்.

# கொல்கத்தாவின் கொட்டத்தை அடக்கி பிளே ஒப் சுற்றுக்கு முன்னேறியது பஞ்சாப்





பிளேஒப் சுற்றுக்கான வாழ்வா, சாவா போட்டியில் பஞ்சாப் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொல்கத்தா மற்றும் பஞ்சாப் அணிகளுக்கிடையேயான 49-வது லீக் போட்டி பஞ்சாப்பில் உள்ள மொகாலியில் நடைபெற்றது.

இந்த போட்டி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு வாழ்வா சாவா? போட்டியாகும். இதில் தோல்வியடைந்தால் பஞ்சாப் அணி பிளே ஒப் வாய்ப்பை இழந்துவிடும்.

சொந்த மைதானத்தில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் பஞ்சாப் அணி களம் இறங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

அதன்படி பஞ்சாப் அணியின் மார்ட்டின் குப்தில், வோரா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.




வோரா 16 பந்தில் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், குப்தில் 16 பந்தில் 12 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ஷேன் மார்ஷ் 11 ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

4-வது வீரராக களம் இறங்கிய சகா 38 ஓட்டங்களும், அடுத்து வந்த மக்ஸ்வெல் 25 பந்தில் 44 ஓட்டங்களும் எடுக்க, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 167 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

கொல்கத்தா அணி சார்பில் வோக்ஸ் மற்றும் குல்தீப் யாதவ் தலா இரண்டுவிக்கெட்டுகள்வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 168 ஓட்டங்கள் எடுத்தால், வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணிக்கு தொடக்க வீரர்களாக சுனில் நரைன் மற்றும் கிறிஸ் லயன் களமிறங்கினர்.

சுனில் நரைன் 18 ஓட்டங்கள், அடுத்து வந்த கம்பீர் 8 ஓட்டங்கள், உத்தப்பா டக்அவுட் என அடுத்தடுத்து பெவலியன் திரும்பினர்.

இருந்த போதிலும் மற்றொரு தொடக்க வீரரான கிறிஸ் லயன் தன்னுடைய அதிரடி காட்டிய படி இருந்தார். இதனால் கொல்கத்தா அணியின் ஓட்ட விகிதமும் சீராக இருந்தது.

ஆனால் அவருக்கு இணையாக ஜோடி கொடுத்து ஆடுவதற்குப் பின் வரிசை வீரர்கள் களத்தில் நிற்கவில்லை.

இதன் காரணமாக அவரே ஆட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி பஞ்சாப் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்வதற்கு கொல்கத்தா அணியின் துடுப்பாட்ட வீரர்கள் திணறினர்.

சிறப்பாக ஆடி வந்த லயன் எதிர்பாராதவிதமாக ரன் அவுட்டாக கொல்கத்தா அணியின் தோல்வி உறுதியானது.

இறுதியாக கொல்கத்தா அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து, 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி 12 போட்டிகளில் விளையாடி 6 போட்டிகளில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் 5-வது இடம் பிடித்து பிளே ஒப் சுற்று வாய்ப்பை தக்கவைத்துள்ளது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தொடர் தோல்வி மன்னிப்புக் கேட்ட கெய்ல்



இந்தியாவில் நடைபெற்று வரும் பத்தாவது ஐபிஎல் தொடரில் தோல்விகளை சந்தித்து வரும் பெங்களூர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இந்தியாவில் ஆண்டு தோறும் நடக்கும் ஐபிஎல் தொடர், பத்தாவது ஆண்டாக தற்போது நடைபெற்று வருகிறது. லீக் போட்டிகள் முடியும் தருவாயில் உள்ளதால், பவர் பிளேவுக்கு தகுதி பெற வேண்டும் என்று அணிகள் போட்டி போட்டுக் கொண்டு விளையாடி வருகின்றன.

ஆனால் இத்தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பெங்களூர் அணி பரிதாப நிலையில் உள்ளது. இதுவரை நடந்த போட்டிகளில் இரண்டு போட்டிகளில் மட்டுமே வெற்றிபெற்று கடைசி இடத்தில் உள்ளது. பெங்களூர் அணியில் கெய்ல், கோலி, டிவில்லியர்ஸ் போன்ற உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் இருந்தும் பெங்களூர் தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறது.

இதுகுறித்து பேசிய ஐ.பி.எல் நாயகன் என்று வர்ணிக்கப்படும் கிறிஸ் கெய்ல் கூறுகையில், ரசிகர்களிடம் எனது மன்னிப்பை கேட்டுக் கொள்கிறேன்.

தொடர் தோல்விகளுக்கு பின்னும் அவர்கள் மைதானத்துக்கு வருவது ஆச்சர்யமளிக்கிறது. கண்டிப்பாக அடுத்த தொடரில் சிறப்பாக விளையாடுவோம் என கூறியுள்ளார்.

# பாகிஸ்தானை பந்தாடுவது உறுதி சௌரவ் கங்குலி தெரிவிப்பு

சம்பியன்ஸ் டிராபி 50 ஓவர் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் ஒரே பிரிவில் இடம் பிடித்துள்ளன. இரு அணிகளும் 4ஆம் திகதி பலப்பரீட்சை நடத்துகின்றன.

போட்டிக்கு இன்னும் 25 நாட்கள் உள்ள நிலையில் இந்த போட்டி குறித்து முன்னாள் வீரர்கள் கருத்து கூற ஆரம்பித்துவிட்டனர். பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி ஆதிக்கம் செலுத்தும் என்று இந்திய அணியின் முன்னாள் அணியின் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

இதுகுறித்து கங்குலி கூறுகையில், சம்பியன்ஸ் டிராபியில் பாகிஸ்தானை இந்தியா வீழ்த்தும். 8 முதல் 10 வருடங்களில் இரு அணிகளுக்கு இடையிலான தரத்தில் மிகப்பெரிய வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. இதுவே இந்தியா ஐ.சி.சி. நடத்தும் போட்டிகளில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்துவதற்கு முக்கியமான காரணமாக இருக்கிறது. இந்தியா மீண்டும் சம்பியன்ஸ் டிராபி தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தும் என்று நம்புகிறேன் என்றார்.

ஆனால், பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவரும், தற்போதைய தலைமை தேர்வாளருமான இன்சமாம் உல் ஹக் கூறுகையில், இந்தியாவிற்கு எதிராக நாங்கள் முக்கியமான தொடரில்சிறந்த சாதனை படைக்கவில்லை.

ஆனால், ஒவ்வொரு நாளும் புதிய நாட்கள். முதல் போட்டியில் இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என்பதை உறுதியாக கூறுகிறேன். இந்தியாவிற்கு எதிரான போட்டி என்பதால் மட்டுமல்ல. அரையிறுதி போட்டிக்குச்செல்ல முக்கிய காரணமாக இருக்கும் என்றார்.

## வித்தியா படுகொலை...

மே மாதம் 13ஆம் திகதி பாடசாலை சென்ற குறித்த மாணவியை கடத்தி சென்ற சிலர் மாணவியை கூட்டு பாலியல் வல்லுறவு செய்து படுகொலை செய்திருந்தார்கள்.

இச் சம்பவமானது அன்றைய காலப் பகுதியில் நாடுபூராகவும் பெரும் அதிர்வலைகள்ளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளூடாக ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றுவருகின்றது.

அத்துடன் இவ் வழக்கின் விசாரணைகள் குற்றப்புலனாய்வு பிரிவானது பின்னர் பொறுப்பேற்று கொண்டு தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுத்து வந்திருந்தது.

இதனடிப்படையில் குற்றப் புலனாய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இக் கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேலும் மூவர் பின்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கில் சந்தேகநபர்களில் முதல் ஒன்பது சந்தேகநபர்களும் ஒரு வருடத்துக்கும் மேலாக நீதிவான் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்ய முடியாத நிலையில் அதற்கான அனுமதியை வழங்கக் கோரி அது தொடர்பான விண்ணப்பத்தை சட்டமா அதிபர் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

இதன்படி மேலும் ஒரு வருடம் நீதிவான் நீதிமன்றில் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியை யாழ்.மேல் நீதிமன்றம் மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் தவணையிட்டு வழங்கி வந்திருந்தது.

இதன்போது கடந்த சில வாரங்களுக்கு முன்பு இவ் வழக்கில் பன்னிரண்டாவது மற்றும் பத்தாவது சந்தேகநபர்களாக இருந்தவர்களை சட்டமா அதிபர் திணைக்களம் வழக்கில் இருந்து விடுதலை செய்திருந்தது.

இந்நிலையில் இவ் வழக்கில் விளக்கமறியல் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு யாழ். மேல் நீதிமன்றம் வழங்கிய காலமும் நிறைவடைந்த நிலையில் அது தொடர்பான .விண்ணப்பம் மன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த வழக்கின் குற்றப் பத்திரத்தை சட்டமா அதிபர் இம் மாதம் பன்னிரண்டாம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் உறுதியளித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இவ் வழக்கினை மூன்று நீதிபதிகள் அடங்கிய ரயல் அட்பார் முறையில் விசாரணை செய்வதற்கான குற்றப் பகிர்வு பத்திரம் மற்றும் அதனூடான கோவைகளை யாழ். மேல் நீதிமன்றுக்கு கடந்த திங்கட்கிழமை தபாலிட்டிருந்தார்.

அத்துடன் இவ் வழக்கினை விசாரணை செய்யும் மூன்று நீதிபதிகளையும் நியமிக்குமாறு பிரதம நீதியரசரை சட்டமா அதிபர் கோரியிருந்தார்.

இச் சந்தர்ப்பத்திலேயே குறித்த வழக்கினை கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றி அங்கு வைத்து பெருமபான்மை இன சிங்கள மொழி பேசும் மூன்று நீதிபதிகளை கொண்டு வழக்கினை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் இது தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் இது விடயம் விவாதத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் அதிகபட்சமாக கொழும்பு மேல் நீதிமன்றிலேயே வழக்கு நடவடிக்கை இடம்பெறுவதற்கு சாத்தியங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் திணைகள தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை குறித்த மாணவியின் பாலியல் வல்லுறவு அதன் பின்னரான கொலை இடம்பெற்ற சம்பவத்தையடுத்து நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டங்களை அடுத்தும் யாழ்.சென்ற ஜனாதிபதி இவ் வழக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து விசேட நீதிமன்றம் மூலம் நீதி வழங்கப்படும் என உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (4)

## பௌத்தமே முதன்...

பௌத்த சாசனத்தை பாதுகாத்து அதனை வளர்ப்பது தொடர்பில் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பொறுப்பை நிறைவேற்ற அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அபேகம மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இராணுவத்தினருக்கு வீடுகள் மற்றும் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த தர்மம் தொடர்பான உயர்ந்த செய்திகளை உலகிற்கு கொண்டு செல்வதற்காகவே சர்வதேச வெசாக் தினம் இலங்கையில் இம்முறை கோலாகலமாக நடைபெறுகிறது.

அதேவேளை படையினர் இந்த நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் செய்த பங்களிப்பை நாட்டு மக்களால் எப்போதும் மறந்துவிட முடியாது.

படையினருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்படும். அவர்களின் நலன்களுக்காக நிறைவேற்ற வேண்டியவற்றை தொடர்ந்தும் அரசாங்கம் பொறுப்புடன் நிறைவேற்றும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (4)

## இன்னொரு போரை...

எதிர்கொள்ள நேரிடலாம். நல்லிணக்கம் மட்டுமே இன்னொரு ஈழக் கோரிக்கையைத் தடுக்கும்.

நல்லிணக்கம் மாத்திரமே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தி யாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர், ஜனாதிபதி, பிரதமர், முப்படைகளின் தளபதிகள் உளளிட்டோரைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சபை தொடர்ச்சியாக கூடி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும் கட்சிகள் மற்றும் தரப்புகளின் அறிக்கைகள் தொடர்பாகவும் விவாதிக்கின்றது.

இதேவேளை போரில் பங்களித்ததற்காக எந்த இராணுவத்தினரும் கைது செய்யப்படவில்லை. முன்னைய ஆட்சிக்காலத்தில் நடந்த நீதிக்குப் புறம்பாக ஊடகவியலாளர்கள் அரசியல் எதிரிகளின் படுகொலைகளில் தொடர்புபட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில்தான் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமக்கு எதிரானவர்களை இலக்கு வைப்பதற்கு சிலர் இந்தப் படையினரைப் பயன்படுத்தி யுள்ளனர்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் போர்க்குற்ற விசாரணை கட்டாயம் நடந்தேயாக வேண்டும். இந்த விசாரணையில் நம்பகத்தன்மை இருக்க வேண்டுமானால் அதில் வெளிநாட்டு நீதிகளின் பங்களிப்பும் அவசியம் எனத் தெரிவித்த சந்திரிக்கா,

இது அரசினுடைய கருத்து அல்ல. தன்னுடைய தனிப்பட்ட கருத்து என்றும் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் அமைப்பு...

இவர்களின் கோரிக்கையை சாதகமாக பயன்படுத்தி நாட்டில் மீண்டும் குழப்பங்களை புலம்பெயர் அமைப்புகள் எதிர்பார்த்து உள்ளன. எவரையும் தனிப்பட்ட முறையில் திருப்திப்படுத்த சர்வதேச விசாரணைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை கருத்தில் கொண்டு சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்துக்களை முன்வைத்துள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

## 4 தங்கச் சங்கிலி...

நேற்றைய தினம் காலை சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய தேர் திருவிழா நடைபெற்றது.

இந்த தேர் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்த நிலையில்,

இந்த சன நெரிசலைப் பயன்படுத்தியே குறித்த சங்கிலி அறுப்பு நடைபெற்றுள்ளது.

இவ்வாறு அறுக்கப்பட்ட சங்கிலிகள் அனைத்தும் ஆலய உட்புறத்திலேயே களவாடப்பட்டுள்ளது.

மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுடைய தங்கச் சங்கிலிகளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த திருட்டுச் நடவடிக்கையில் பெண்கள் கொண்ட குழு ஒன்றே ஈடுபட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (4)

## முல்லையில் மீண்டும்...

மாவட்ட செயலக புள்ளிவிபரத்தின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாயிரத்து 84 தமிழ் மக்களுக்கு சொந்த காணிகள் இல்லை, இதே போன்று 902 முஸ்லிம் மக்களுக்கும் காணிகள் இல்லை.

இரு மடங்காகி உள்ள தமிழ் மக்களுக்கு காணிகள் எவையும் விடுவிக்கப்படாமல் வன இலாகா பிரிவிற்கு சொந்தமான காணிக்குள் அமைச்சர் ஒருவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி எவ்வாறு சட்டவிரோத குடியேற்றங்களை ஏற்படுத்த முடியும் எனவும் கேள்வியெழுபப்பட்டுள்ளது.

குறித்த அடிக்கல் நாட்டும் இடம் தேக்கம் மரங்களை கொண்ட வனப்பு வாய்ந்த வனமாக காணப்பட்ட நிலையில் மகிந்த அரசின் காலத்தில் இதேபோன்ற ஒரு அபகரிப்பு முயற்சி நடைபெற்றது.

அந்த முயற்சி பலத்த எதிர்ப்புக்களையடுத்து கைவிட்டிருந்த நிலையில் தற்போது யாருக்கும் தெரியாமல் சத்தமின்றி குறித்த காடழிப்பையும் குடியேற்றத்தையும் மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவரான ரவிகரனிடம் கேட்ட போது, அடிக்கல் நாட்டும் வைபவம் இன்றைய தினம் நடைபெறவுள்ளதனால், உடனடியாக தம்மால் ஏதும நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளதாகவும், எனினும குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாகவும் வலம்புரியிடம் கூறியுள்ளார். (4)

# பொலிஸ் பொறுப்பதிகாரி மயிரிழையில் உயிர் தப்பினார்



மன்னார்- மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் 11 ஆம் கட்டை பகுதியில் நேற்று புதன் கிழமை காலை 11.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் அடம்பன் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மதவாச்சி வீதியூடாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பொலிஸ் நிலையத்தை நோக்கி காரில் பயணித்துக் கொண்டிருந்த போதே முருங்கன் கட்டுக்கரைக்குளம் 11 ஆம் கட்டை பகுதியில் குறித்த கார் விபத்திற்குள்ளாகியுள்ளது.

அதி வேகமாக பயணித்த குறித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி முருங்கன் கட்டுக்கரைக்குளம் 11 ஆம் கட்டை பகுதியில் வீதிக்கு அருகில் நின்ற மரம் ஒன்றுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது குறித்த காரை செலுத்தி வந்த அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

எனினும் குறித்த கார் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. எனினும் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# விகாரையில் குளவித் தாக்குதல் 50 பேர் வைத்தியசாலையில்

(புத்தளம்)

முந்தளம் விஜய ஸ்ரீவர்தனாராம விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த குழுவினர் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட குளவித் தாக்குதலில் 50 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விகாரையின் பிரதம விகாராதிபதி உட்பட 40 பேர் சிலாபம் வைத்தியசாலையிலும் 10 பேர் யானை விழுந்தான்குளம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிறுவர்களும் பெண்களும் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# சகல மக்களையும் மதிக்க வேண்டும் - சம்பந்தன்

புத்த பெருமானின் போதனைகளுக்கு அமைவாக இனம், மதம், குலம், செல்வம், ஆண், பெண் பால் பாகுபாடு மற்றும் வேறு பேதங்கள் எதுவுமின்றி அனைத்து மனிதர்களையும் சமமாக மதிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



உலக வாழ் பௌத்தர்களால் நேற்று (புதன்கிழமை) கொண்டாடப்படும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தார்மீக வாழ்க்கை ஒன்றினை நடத்திச் செல்வதற்காக மனிதர்களால் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை புத்த பெருமான் உலகிற்கு எடுத்துரைத்துள்ளார்.

இந்நிலையில், இம்முறை வெசாக் கொண்டாட்டம் மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் என்பவற்றின் போது கலந்துரையாடப்படவுள்ள விடயங்களில், புத்த பெருமானின் போதனைகளை தெளிவுபடுத்தி அதனூடாக முழு உலகிற்கும் நிரந்தர சமாதானம் மற்றும் சமூக நீதி என்பவற்றினை பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்புக் கிட்ட வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார்.

# டெங்கு தடுப்பூசி அறிமுகமாகிறது

டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பூசியை எதிர்காலத்தில் நாட்டில் அறிமுகம் செய்ய முடியுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசி பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதை இலங்கையில் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பிலான ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் மற்றுமொரு தடுப்பூசி தொடர்பிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

## ஒத்துழைப்பை...

அதிபரின் பாதுகாப்பு அதிகாரியின் 0718592 020 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பொதுமக்கள் தமது முறைப்பாட்டினை பதிவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிலியந்தல பொலிஸ் அதிகாரிகள் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 3 சிறுவர்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## விமான நிலைய...

க்கிழமை மலையகத்திற்கு விஜயம் செய்கிறார். அங்கு நிகழ்வுகளில் பங்கேற்று பின்னர இந்தியாவிற்கு திரும்புவதற்கு முன்னர் நாளை மாலை 3 மணிக்கு கூட்டமைப்பினரை சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ்பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் கட்சியின் ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இரா.சம்பந்தன், இந்தியப் பிரதமருடன் நடக்கவுள்ள சந்திப்புத் தொடர்பாக இந்தியத் தூதரகம் என்னைச் சந்தித்து கலந்துரையாடியது,

இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் போது, சமகால அரசியல் நிலைமைகள் குறித்து பேசவுள்ளேன்.

குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, காணாமலாக்கப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்களின் நிலைமை, காணி விடுப்பு, அது தொடர்பாக இடம்பெறும் போராட்டங்கள், வாழ்வாதார தேவைப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்து எடுத்துரைக்கவுள்ளேன்.

வடக்கு கிழக்கு மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளேன். இந்த நாட்டில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நிரந்தரமான நியாயமான அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தவுள்ளேன்.

1983ஆம் ஆண்டிலிருந்து இந்தியா ஒருமித்த நாட்டிற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்ற நிலையில் அந்த நாட்டிற்கு பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும்.

தமிழ் மக்களுக்கான நியாயமான நிரந்தரமான தீர்வுக்காக அதிகாரங்கள் நியாயமாக பகிரப்படுவதற்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கோரவுள்ளேன்.

தற்போதைய சூழமைவில் இந்த முக்கியமான சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமானதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம்
25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் மே 15 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
(சி-8530)
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம்.

## மோடியின் விஜயத்தில்...

வித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐ.நா. வின் சர்வதேச வெசாக் தின நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதற்காகவே நரேந்திர மோடி இலங்கை செல்வதாக இந்திய பெருங்கடல் பிராந்திய இணைச் செயலாளர் சஞ்சய் பாண்டா கூறியுள்ளார்.

அத்துடன், பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் இல்லை எனவும் இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

இரு நாடுகளின் சார்பில் கூட்டு நடவடிக்கைகள் குழு அமைக்கப்பட்டு, பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்திய மத்திய அரசின் இணைச்செயலாளர் கூறியுள்ளதாகவும் அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் அரசியல்...

த்துள்ளார். இதுதொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு க்ருணை மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த கருணை மனுவின் விபரம் வருமாறு,

ஜனாதிபதி அவர்களே! தேவாலய வீதி, முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு எனும் நிரந்தர முகவரியைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மகேந்திரன் ஆகிய நான், 1993ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு, அறியாததொரு குற்றத்திற்காக, கடந்த 24 வருடங்கள் சிறை வைக்கப்பட்டுள்ளேன். இந்நிலையில் தயவுகூர்ந்து, எனது இந்த கருணை வேண்டுகோளினை பரிசீலித்து, நானும் ஒரு சாதாரண பிரஜையாக இந்நாட்டில் வாழ சந்தர்ப்பமளிக்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

அதாவது நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் போர் சூழ்ந்த மட்டக்களப்பு மண்ணிலே தான். அறியாத, தெரியாத எனது 16 வயதில் அன்றிருந்த ஆயுதக் குழுவாகிய விடுதலைப் புலிகளின் அறைகூவலுக்கு ஆட்பட்டு, சுமார் இரண்டு வருடங்கள் அவர்களுடைய பாசறைக்குள் இருக்க வேண்டியேற்பட்டது. ஆனால் சிறுவனான என்னை எந்தவொரு படையணி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தவில்லை. முகாமுக்குள் சிறு எடுபிடி வேலைகளைச் செய்து வந்தேன். எனினும், தொடர்ந்து அங்கிருக்க விரும்பாத நான் அவ்வமைப்பில் இருந்து முற்று முழுதாக விலகி எனது 18ஆவது வயதில், வீட்டிற்கு வந்து கூலித் தொழில் புரிந்து அம்மாவிற்கு உதவியாக இருந்தேன்.

இவ்வாறிருக்கையில், 1993.09.27 அன்று வந்தாறுமூலை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட, சுற்றிவளைப்பின் போது, சந்தேகத்தின் பேரில் என்னைக் கைது செய்து கொண்டு சென்றனர். அதன் போது எனது வயது 19. விசாரணை என்ற பெயரில் என்னை அச்சுறுத்திய புலனாய்வு பிரிவினர், தமக்குத் தேவையான வகையில் குற்றச்சாட்டுக்களை அடுக்கி, எனது கையொபத்தையும் பெற்றுக்கொண்டனர். அதற்கமைய நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அதன்படி, 1994 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றினால் எனக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனையும், அதற்கு மேலதிகமாக 50 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. சற்றும் எதிர்பாராத இந்தத் தண்டனைத் தீர்ப்பு எனது ஏழை பெற்றோரைப் புரட்டி போட்டு, பிணிதொற்றச் செய்துவிட்டது. கருணை கொண்ட சட்ட உதவி அமைப்பொன்று எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை மேன் முறையீடு செய்து, வழக்கினை நடத்தியது. கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றமானது, கீழ் நீதிமன்றம் வழங்கிய அதே தீர்ப்பினை சரியானதே என்று உறுதி செய்து தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து குறித்த சட்ட உதவி அமைப்பானது, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. அதனைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், எனக்கு ஏற்கெனவே உறுதி செய்யப்பட்ட ஆயுள் காலச் சிறைத் தண்டனை சரியானதே என்றும், மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த 50 வருட சிறைத் தண்டனையினை, 10 வருட காலத்துக்குள் அனுபவித்து முடிக்குமாறும் இறுதித் தீர்ப்பளித்தது.

இந்த அளவில் துன்பங்களால் துவண்டு, நோய்வாய்ப்பட்டிருந்த எனது தந்தை, கடந்த 2008ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதனையடுத்து எனது தாயாரும் நீரிழிவு, மாரடைப்பு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டு, 2015 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். ஆதரவற்ற, நீண்டகால சிறையிருப்பினால் நான், காசநோய், நீரிழிவு மற்றும் மாரடைப்பு போன்ற பொல்லாத நோய்களினால் பீடிக்கப்பட்டு, கடந்த 24 வருடங்களாக சிறையில் அல்லல்பட்டு வருகிறேன். என்மீது காணப்பட்டுள்ள குற்றங்களை, எனது 16 வயதிற்கும் 18 வயதுக்கும் இடையில் எவ்வாறு புரிய முடியும், என்ற வினாவுக்கு விடையின்றியே, எனது வாழும் காலம் சிறைக்குள் தொலைகிறது.

எனவே, கருணை உள்ளம் கொண்ட ஜனாதிபதியாகிய தாங்கள், எனது 43 வயதில் 24 வருட சிறை வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பதை கருத்தில் எடுத்து, நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாகிய தங்களுக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கமைவாக எனது ஆயுட்காலச் சிறைத் தண்டனையினை, சாதாரண சிறைத தண்டனையாகக் குறைத்துத் தருமாறு வினயமுடன் விண்ணப்பிக்கிறேன். எனது வாழ்க்கையின் இனிமையான இளமைக்காலம் கழிந்து விட்ட நிலையில், என்து மிகுதி வாழ்வுக்கேனும் ஒளியேற்றி உதவும்படி அருள் கூர்ந்து வேண்டுகிறேன் என்று உள்ளது.(9)

# இலங்கையில் பிரமாண்டமான புத்தர்




உலகிலேயே மிகவும் நீளமான மணல் புத்தர் சிலை கொழும்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலையை வடிவமைப்பதற்காக இந்தியாவில் இருந்து வருகை தந்த சுதர்சன் பட்நாயக் இதனை நிறைவு செய்துள்ளார்.

உலக புகழ்பெற்ற மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் இந்த நீண்ட புத்தரை உருவாக்கியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், பட்நாயக் இலங்கை வந்திருந்தார்.

இந்த நிலையிலேயே, பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் உலகின் மிக நீண்ட 40 அடி நீளம் கொண்ட மணல் புத்தர் சிலையை, சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட ஒரிசாவின் மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் வடிவமைத்துள்ளார்.

## 'முதலமைச்சரிடம்...

முதலமைச்சரைச் சபை வளாகத்திற்குள் செல்ல விடாது தடுத்து நிறுத்திப் போராட்டம் மேற்கொண்டனர்.

இதன்போது வேலையற்ற பட்டதாரிகள் வட மாகாண முதலமைச்சருடன் கடும் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் வட மாகாண முதலமைச்சர் நேற்று இடம்பெற்ற வட மாகாண சபை அமர்வில் கலந்து கொள்ள முடியாதவாறு திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

இதன் பின்னர் வட மாகாண முதலமைச்சர் வெளியிட்டிருந்த அறிக்கையில் தன்னுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த போது பட்டதாரிகள் தன்னுடன் அதட்டலான முறையில வார்த்தைப்பிரயோகங்களை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக 73ஆவது நாளாகவும் கால வரையற்ற கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வரும் வேலையற்ற பட்டதாரிகள் கருத்து வெளியிடுகையில்,

வடமாகாண முதலமைச்சருடன் வட மாகாண சபைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலில் நாம் அதட்டலான முறையில் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், எங்களுக்கு முதலமைச்சர் மீது தனிப்பட்ட கோபமோ அல்லது பகையோ இல்லை. நாங்கள் எமது பிரச்சினைக்கான தீர்வைத் தான் அவரிடம் எதிர்பார்த்தோம்.

இந்தக் கலந்துரையாடலின் போது அவரது மனம் உளைச்சலுக்குள்ளாகும்படி நாங்கள் செயற்பட்டிருந்தால் அவரிடம் மன்னிப்புக் கோருகின்றோம் என வேலையற்ற பட்டதாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## மோடி இன்று...

வரும் அவர் நாளை வெள்ளியன்று புத்தர் ஜெயந்தி விழாவை தொடக்கி வைக்க உள்ளார்.

இதனை தொடர்ந்து மத்திய மாகாணத்திற்கு செல்லும் அவர் அங்கும் வாழும் ஆயிரக்கணக்கான மலையக தமிழர்களுக்காக இந்திய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கிளங்கன் மருத்துவமனையை தொடக்கி வைககிறார். அங்கு பொதுக்கூட்டத்திலும் மோடி பங்கேற்று பேசவுள்ளார். அவரும் இலங்கை ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

## மோடியுடன் நானும்...

வித்துள்ளார்.

ருவான்வெல்லையில் உள்ள விகாரையொன்றில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச விசாகப் பண்டிகை நிகழ்வில் மோடி பங்கேற்கவுள்ளார்.

இதன் பின்னர், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை திறந்துவைப்பதுடன், நோர்வூட் மைதானத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டமொன்றிலும் பங்கேற்கவுள்ளார்.

இந்த நிலையில், மோடி இலங்கையில் பங்கேற்கும் நிகழ்வில் தாமும் பங்கேற்க உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஆட்கள் தேவை!
வியாபார நிலையத்திற்கு ஆண் பெண் இருபாலாரும் உடன் தேவை
GUNA BEST PC
50/12, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
522, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
கணினி திருத்தம் விற்றல் வாங்குதல்
(சி-8537)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK-550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)
தகுதி :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்கின்றோம்.
மாற்றுத்திறனாளிகளும் விண்ணப்பிக்கலாம்.
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)
0768226236
(சி-8497)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.